[illegible]

தொ. 8.

இத. 1.

August, 1927.


JL
Y592ണ2॥, N27ധ
N27·1·8
208437.




[August] 1927

SEP 1927

# செங்குந்த மித்திரன்.

SENGUNTHA MITHRAN

உள்ளுறை


| | |
|---|---|
| பத்திரிகாசிரியரின் முன்னுரை | ௨௭௧ |
| ஒட்டக்கூத்தர் திருநாள் | ௨௮௫ |
| குலதிலகர் பகுதி | ௨௮௪ |
| நெசவுத் தொழிலும் நம்மவர்களும் | ௨௯௧ |
| விநாயகசதுர்த்தி விரதம் | ௨௯௭ |
| வித்தியாதானம் | ௩௦௬ |
| தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்க கமிட்டி | ௩௧௨ |
| கடிதங்கள். | ௩௧௪ |
| பஞ்சாங்கம் | |


ஆசிரியர்

ம. சண்முகசுந்தர முதலியார்

எம். ஏ; எல். டி;

Publisher:—T. N. Sabapathi Mudaliar, Madras.

# செங்குந்

## மாதப்ப

## தென்னிந்திய செங்குந்த

இதனுள் போதநீதிகள், அறிவை ... கல்வெட்டுகள், செப்பேடுகள், சரித்திர ஆராய்ச்... குறிப்புகள் முதலான அரும்பெரும் விஷயங்கள் பிரசுரிக்கப்படும்.

அன்றியும், முக்கியமாக செங்குந்தரின் முற்கால தற்கால வருங்கால நிலைமையை, ஆராய்ச்சியுடனும் ஆதாரத்துடனும் விளக்கமாக எழுதி வரப்படும். ஆதலால், ஒவ்வொரு செங்குந்த ...மக்களும் உடனே சந்தாதாரராய்ச் சேர்ந்து மித்திரனை ஆதரித்து வருதல் வேண்டும்.

### தபாற் கூலி உள்பட வருஷ சந்தா

| | | | |
|---|---|---|---|
| இந்தியா, இலங்கை, பர்மா முதலிய இடங்கட்கு | 1 | 8 | 0 |
| பினங்கு, சிங்கப்பூர் முதலிய வெளிநாடுகளுக்கு | 2 | 0 | 0 |
| தனிச் சஞ்சிகை ஒன்றுக்கு விலை அணா | 0 | 2 | 0 |

### குறிப்பு

இப்பத்திரிகையைக் கண்ணுறும் ஒவ்வொரு சகோதரர்களும் தங்கள் தங்களாலியன்றவரைச் சந்தாதாரர்களைச் சேர்த்து அனுப்புமாறு கேட்டுக் கொள்ளுகின்றனம்.

இப்பத்திரிகையினால் வரும் ஊதியத்தை ஏழைச் செங்குந்த மாணவர்களுக்கு உபகாரச் சம்பளம் கொடுப்பதாக நமது சங்கத்தார் தீர்மானித்திருக்கிறார்கள் அவ்வண்ணம் சென்னையில் இப்போதும் சில உயர்தரக் கலாசாலை மாணவர்களுக்கு உபகரித்து வருகின்றார்கள்.

எந்த மாதத்திற் சேரினும் தை மாதம் முதற்கொண்டே சந்தாதாரராகக் கணக்கிடப்பட்டு அது முதலுள்ள சஞ்சிகைகளையும் சேர்த்தனுப்பப்படும்.

சந்தாதாரர்கள் அனுப்பும் கடிதங்களிலும் மணியார்டர்களிலும் அவரவர்களுடைய சந்தா நம்பரைக் குறிப்பிட்டு யெழுதுதல் வேண்டும். சந்தா நம்பர்கள் போடாத கடிதங்கள் கவனிக்கப்படமாட்டாது.

புதிய சந்தாதார்கள் அனுப்பும் கடிதங்கள் மணியார்டர்களில் புதிய சந்தாதார் என்று குறிப்பிடுதல் வேண்டும்.

### வேண்டுகோள்

சகோதரர்களே நமது மித்திரன் வந்து, (ஏழு) 7 மாசகாலமாகியும் அநேகர் இன்னும் சந்தா தொகையை அனுப்பாமல் பராமுகமாயிருக்கிறார்கள். முன் பணமின்றி எப்பத்திரிகையையும் அனுப்பப்படாமலிருக்க நமது பத்திரிகையை 7-மாஸகாலமாய்ப் பெற்ற நமது சகோதரர்களின் உறக்கம் என்னே தயை செய்து இனியாவது தாமதமில்லாமல், சந்தா தொகையை மணியார்டர் மூலம் அனுப்புவீர்கள் என்று எதிர்பார்க்கின்றேன்.

T. N. சபாபதி முதலியார்

மானேஜர்:—"செங்குந்த மித்திரன்" ஆபீஸ்,

31, அரண்மனைக்காரன் தெரு, சென்னை

உ

முருகன் துணை

# சேங்குந்த மித்திரன்

[ஆசிரியர்: ம. சண்முகசுந்தர முதலியார், எம்.ஏ.,எல்.டி.,]

மாதப்பத்திரிகை

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்க வெளியீடு

| தொகுதி - க | பிரபவ௵ ஆவணி௴ | பகுதி - அ |
|---|---|---|

2 6 SEP 1927

வேலுமயிலுந்துணை

திருவடி யுந்தண்டை யுஞ்சிலம் புஞ்சிலம் பூடுருவப்
பொருவடி வேலுங் கடம்புந் தடம்புய மாறிரண்டு
மருவடி வான வதனங்க ளாறு மலர்க்கண்களுங்
குருவடி வாய் வந்தென் னுள்ளங் குளிரக் குதிகொண்டவே.

---

## பத்திரிகாசிரியரின் முன்னுரை

செங்குந்தமித்திரனை இதுகாறும் சீர் பெற நடத்தி வந்த ஸ்ரீலஸ்ரீ காஞ்சி நாகலிங்க முனிவர் அவர்கள் தமது வயோதிக தசையில் பத்திரிகையை நடத்த இயலாமை காரணமாக ஆசிரியர் ஸ்தானத்திலிருந்து விலகிக்கொண்டார் என்பதைச் சென்ற மாதமே வெளியிட்டுள்ளோம். செங்குந்த குல மக்களுள் ஒரு கிளர்ச்சியை யுண்டாக்கி அவர்களுக்கு முன்னேற்ற உணர்ச்சியை முதன் முதல் ஊட்டிய பெரியார் நமது அடிகளே என்பது செங்குந்த உலகம் அறியாததன்று. செங்குந்த குல திலகரின் திவ்விய சரித்திரங்களை ஆங்காங்கே பிரசங்கித்தும், அன்னோரின் திவ்விய பிரபந்தங்களை அவ்வப்போது அச்சேற்றியும், நமது குல

முன்னேற்றத்திற்கு இன்றியமையாத துணைக்கருவிகளாகிய பத்திரிகைகளை நடத்தியும், இன்னோன்ன பல நெறிகளிலும் முனி [illegible] செய்துள்ள குலத்தொண்டு என்றும் மறத்தற்பாலதாகாது. அவரது நாவன்மையும், ஆராய்ச்சி நுட்பமும், குலாபிமானமும் பெரிதும் போற்றத்தகுந்தவை. அவரது வயோதிகத்தில் அவற்றால் நமது குலம் முன் அடைந்த வண்ணம் பயனடையாமற்போக நேர்ந்தது யாவரும் விசனிப்பதற்கொன்றே யாகும். எனினும், அவர், பத்திரிகாசிரியராக இருப்பதற்கு இயலாதிருந்தும், நமது பத்திரிகைக்குச் சமயா சமயங்களில் சிறந்த கட்டுரைகள் எழுதித்தருவதற்கு ஒப்புக்கொண்டிருக்கின்றனர். இவ்வுறுதி மொழிக்கும், அவர் இதுவரைக்கும் ஓய்வு சாய்வின்றிச் செய்து வந்த குலத்தொண்டிற்கும் செங்குந்தர்கள் அனைவரும் அவர்பால் நன்றியறிதலுடன் இருக்கக் கடமைப் பட்டிருக்கின்றனர். அவர் இனி நீடூழி காலம் நம் நடுவில் பிணியின்றி இருந்து அவர் தம் தளர்ந்த பருவத்திற்குத் தகுந்த குலத்தொண்டையியற்றி நமக்குதவ இறைவன் அருள்கூர்வானாக. இனி, நமது பத்திரிகை எம்மாலும், எமக்குத் துணையாக ஏற்பட்டிருக்கும் ஆசிரிய சபையாலும் செவ்வனே நடைபெறுமாறும் எல்லாம் வல்ல இறைவன் அருள்புரிவானாக.

செங்குந்த குலமுன்னேற்றதை நாடுவதே நமது பத்திரிகையின் முக்கிய நோக்கமாக இருத்தலின், அம்முன்னேற்றத்திற்கு அடி ஆதாரமாகிய கல்வியைப் புகட்டுதலே எமது முதல் கடமையாக அமைந்திருக்கின்றது. பத்திரிகை வாயிலாகப் புகட்டப்படுங் கல்வியே படித்தோர்க்கும் பாமரர்க்கும், மூத்தோர்க்கும் சிறியோர்க்கும், ஆண்களுக்கும் பெண்களுக்கும், தனிகர்க்கும் எளியார்க்கும், பொதுப்படப் பயன்பட்டுச் செங்குந்த உலக முழுதும் ஒரே கதியில் பரவக்கூடிய தொன்றாகலின், இக்கல்வியே நமது குல முன்னேற்றத்திற்கும் எதற்கும் முற்பட்டதாக வேண்டியதென்பது எவர்க்கும் வெளிப்படை. நமது மித்திரன் பிறந்து ஏழுமாதமேயாயினும், இதற்குள், அவன் செய்துள்ள கிளர்ச்சியின் மும்முரத்தை நோக்கும்போது, அவனால் ஆகாத காரியம் இராதென்றே நம்பலாம். இந்நம்பிக்கையே எம்மை நமது மித்திரனை மேலும் மேலும் செம்மையாக நடத்தத் தூண்டுகின்றது.



நமது மித்திரன் வாயிலாகப் பரவ இருக்கும் கல்வியறிவை ஒருவிதமாகப் பாகுபடுத்தி இம்மாதம் வெளியிட்டிருப்பதை நண்பர்கள் காணலாம். ஆராய்ச்சிப் பகுதி, குலதிலகர் பகுதி, தொழிற்பகுதி, விரதப்பகுதி, பொது விஷயங்கள், செங்குந்தர்களின் கிளர்ச்சி, பஞ்சாங்கம் எனச் சில அங்கங்களோடு இது இம்மாதம் வெளிவருகின்றது. ஆராய்ச்சிப் பகுதியில், நமது வகுப்பினரின் பண்டைப் பெருமைகளையும் அவர்களின் தற்கால நிலைமையின் காரணங்களையும்பற்றிப் புராண இதிகாசங்கள், பண்டைத் தமிழ் நூல்கள், கல்வெட்டுக்கள், சரித்திர ஆராய்ச்சி முதலியவற்றின் உதவியைக்கொண்டு, ஆராய்ச்சி முறைகளில் பழகிய அறிவாளர்கள் எழுதும் கட்டுரைகள் வெளியாகும். குலதிலகர் பகுதியில், செங்குந்த குலத்திற்குத் திலகங்களைப் போல் விளங்கிய பெரிய சேனாபதிகள், அமைச்சர்கள், புலவர்கள், சீமான்கள் ஆதிய சிலர்களின் வரலாறுகள் சிறந்த ஆராய்ச்சியுடன் வெளியாகும். தொழிற்பகுதியில், நமது இனத்தார் மேற்கொண்டுள்ள நெசவு, உழவு, வியாபாரம் முதலிய தொழில்களை விருத்தி செய்யும் மார்க்கங்களை விளக்கும் கட்டுரைகள் வெளியாகும். விரதப்பகுதியில், அவ்வம்மாதத்தில் நமது இனத்தார் கொண்டாடும் விரதாதி பண்டிகைகளைப்பற்றிய சரித்திரங்களும், குறிப்புக்களும் விவரிக்கப்பெறும். பொது விஷயங்களுக்கென அமைத்துள்ள பகுதியில், நமது குலத்திற்கே அன்றி மக்கள் தொகுதியிலுள்ள எவர்க்கும் (மூத்தோர்க்கும், மாணவர்க்கும், பெண்களுக்கும்) பயன்தரக்கூடிய பொது விஷயங்களைப்பற்றிய அரிய கட்டுரைகள் தோன்றும். செங்குந்தர் கிளர்ச்சி என்னும் தலைப்பின்கீழ், ஆங்காங்கே நிகழும் செங்குந்தர் கூட்டங்களின் நடவடிக்கைகளும், செங்குந்தர் முன்னேற்றத்திற்கெனத் தோன்றும் முயற்சிகளின் வரலாறுகளும் வரையப்பெறும். முடிவில் மாதம் மாதம் அடுத்த மாதத்திய பஞ்சாங்கமும் வெளிவரும். இன்னும், சமயம் வாய்க்கும்பொழுது, பூதபௌதிக ரசாயன சிற்ப சாஸ்திராதி சம்பந்தமுள்ள அறிவியல் விஷயங்களும், சமய உண்மைகளும், பெண்களுக்குரிய பல குறிப்புக்களும் கதைகளும் சம்பாஷணைகளும், பண்டை நூல்களும் அவற்றின் உரைகளும் நமது பத்திரிகையில் பிரசுரிக்கத் தீர்மானித்துள்ளோம். எமது எண்ணங்களும் தீர்மானங்களும் தடை சற்றுமின்றி நிறை

வேறும் வண்ணம் குலாபிமானமும், அறிவும், ஆற்றலும் நிறைந்த வித்தியார்த்திகளும் பண்டிதர்களும் விஷயதானங்கள் அனுப்பி அருள்வார்களென எதிர்பார்க்கின்றோம். ஒரு பத்திரிகை யாவர்க்கும் பயனளிக்கும் நெறியில் நடப்பதற்குப் பல அறிவாளிகளின் கூட்டுறவும், ஒத்துழைப்பும் அவசியமாகும். செங்குந்த குல சிரோன்மணிகளாக அவதரித்துள்ள வித்வசீலர்கள் தம் குலத்தவர் கல்வியறிவைப் பெற்று முற்னேற்றமடையும் வண்ணம் அவ்வப்போது பல அரிய பெரிய விஷயங்களைப்பற்றிய கட்டுரைகளை எழுதி எமக்கு அனுப்புவாராக.

வித்வ சிரேஷ்டர்களின் ஆதரவும் தாளாண்மையும் நமக்குக் கிடைத்தும், பாமரர்கள் பத்திரிகையில் உண்மையபிமானம் வைக்காதிருந்தால் நமது சமுக முன்னேற்றமடைவது பகற்கனவேயாகும். சேங்குந்த மித்திரனை பல்லாயிரக்கணக்காக அச்சிட்டு அனுப்பினும் இதுவரைக்கும் சந்தா தொகையாகிய ரூபா (1-8-0) ஒன்றரையை எமக்குச் செலுத்தியவர் வெகு சிலரே யாவர். ஐந்து லக்ஷம் தொகையுள்ள நமது வகுப்பினருள் உண்மையபிமானமிருப்பின் நமது குலப்பத்திரிகைக்கு 50000 சந்தாதாரர் கிடைப்பது அரியதொரு காரியமன்று. இனியாவது எமது தொண்டிற்குச் சிறிது பரிவுகாட்டி நம் குல மேம்பாட்டில் ஊக்கமெடுத்துக்கொண்டு செங்குந்த நேயர்கள் பாக்கித் தொகையை அனுப்பித் தருவார்களென நம்புகிறோம். இன்னும் அவர்கள் மித்திரனுக்குப் பல சந்தா நேயர்களைத் திரட்டித்தரவும் முன் வருவார்களாக. இதோடு நில்லாது அவர்கள் செங்குந்தர் வசிக்கும் ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு சேங்குந்தர் சங்கத்தை ஸ்தாபகஞ்செய்து, அது சென்னையிலுள்ள தாய்ச்சங்கமாகிய தேன்னிந்திய சேங்குந்த மகாஜன சங்கத்தின் ஆதரவில் அதற்கு ஒத்தாசையாக உழைத்து அதன் நன்னோக்கங்களை நிறைவேற்று மார்க்கத்தைத் தேடுவார்களாக.

செங்குந்த குலமக்களே துயிலெழுங்கள் ! துயிலெழுங்கள் !! துயிலெழுங்கள் !!!

ம. சண்முக சுந்தர முதலியார்.

---



# ஒட்டக்கூத்தர்

## திருநாள்.

### (ஆவணி 22உ)

செங்குந்த குலதிலகராய ஒட்டக்கூத்தரின் திருநக்ஷத்திரம் நாளது பிரபவஸு ஆவணிமீ 22-ந் தேதி (7-9-27) புதன்கிழமையாகும். இத்திருநாளைக் கொண்டாடுவது செங்குந்த குலமக்கள் குழுமி வசிக்கும் ஒவ்வொரு கிராமத்திலும் அவசியமாகும். ஆகவே, இதை ஒரு சுபதினமாகக் கருதிச் செங்குந்தர்கள் எல்லோரும் விழா கொண்டாடுவார்களாக. அன்றியும், செங்குந்தர் சங்கங்கள் இல்லாத இடங்களிலெல்லாம் அத்தினமே நம் குலமக்கள் சங்கங்கள் நிறுவி அன்று முதல் நமது குல முன்னேற்றில் கண்ணுங் கருத்துமாயிருப்பார்களாக.

நமது குலத்தின் பெருமையை நிலைநாட்டிய இப்பெரியோர்க்கு நாம் செலுத்தக்கூடிய கைம்மாறு இதுவேயாகும்.

இங்ஙனம்,

பத்திரிகாசிரியர்.

# குல திலகர் பகுதி.

## அமைச்சர் ஒட்டக்கூத்தப் புலவர்

### ஒட்டக்கூத்தரும் அவரது திருநக்ஷத்திரமும்

பண்டைக்காலப் புலவர்களுள் வரகவியாக விளங்கியவரும், கவிச்சக்கரவர்த்தி, கவுடப்புலவன், சிரச்சிங்காதனாதிபதி எனப் பல சிறப்பு நாமங்களைப் பெற்றவரும் செங்குந்த குலதிலகருமான ஒட்டக்கூத்தர் இற்றைக்கு எண்ணூறு வருடங்களுக்கு முன்னே சோழநாட்டிலுள்ள சப்த விடங்க க்ஷேத்திரங்களிலொன்றாகிய திருவாய்மூர் என்னும் திருப்பதியின் பக்கலிலுள்ள மணக்குடி என வழங்கும் மணவைப்பதியிலே செங்குந்த குல சிரேஷ்டராகிய சிவ சங்கரபூபதி என்னும் உத்தமருக்கும் வண்டமர் பூங்குழலி என்னும் அவர் பத்தினியாருக்கும் புத்திரராய்ப் பிறந்து, அம்பலக்கூத்தன் என்னும் பிள்ளைத் திருநாமத்துடன் வளர்ந்து ஐந்தாமாண்டில் பள்ளிக்கனுப்பப்பட்டுச் சகல கலைகளையும் கற்றுத் தேர்ந்து பள்ளிச்சிறார்களால் அம்பலக்கூத்தன் என்னும் பெயரில் அம்பலம் என்னும் பதம் அம்பலத்தில் விடப்பட்டுக் **கூத்தன்** என்னும் பெயருடன் விளங்கினர். பின்பு கூத்தர் வாணியின் அருள்பெற நினைந்து, திரு அம்பர் மாகாளம் என்னும் க்ஷேத்திரத்தின் மேற்பால் ஹரிசொல் நதி என்னும் அரசிலாற்றின் தென்கரையில் ஒரு ஆலயம் வகுத்து அதனுள் சாரதாதேவியைப் பிரதிஷ்டை செய்து பூஜித்து வந்தார். அவரது பக்திக்கிரங்கிய சாரதாதேவி பிரசன்னமாகித் தமது திருமுலைப்பாலை யோர் வட்டிலிற் கறந்துண்பித்துச் சகல கலாநிலயமென்னுமோர் புத்தகத்தினையுமவர் கையிற்றந்து மறைந்தனள். உடனே கூத்தருக்குப் புலமை நிரம்பி அருட்கவி பாடும் திறன் உண்டாயது. அக்கால் சோழநாட்டை அரசாண்டிருந்த விக்கிரம சோழன் கூத்தரது புலமையைப்பற்றிக் கேள்வியுற்று அவரைத் தனதரண்மனைக்கண்ணழைப்பித்து, அவரது கவித்திறத்தினை மெச்சி வரிசை பல தந்து கவிராசனென்னும் பட்டமும் கொடுத்து, தனதாஸ்தான பெரும் புலவராக அமர்த்திக்கொண்டனன். அன்று முதல் புவியரசனாகிய விக்கிரம சோழனும் கவியரசராகிய கூத்தரும் இணைபிரியாது வாழ்ந்து வந்தனர். அது



காலை நமது புலவர் பெருமான் விக்கிரமசோழன் மேல் அரும்பைத்தொள்ளாயிரம் விக்கிரமசோழனுலா முதலிய பிரபந்தங்களைப் பாடி மகிழ்ந்திருந்தனர். பின்னர் விக்கிரமசோழன் மகன் குலோத்துங்க சோழனுக்கு நமது புலவர் பெருமானே வித்தியாகுருவாக இருந்து சகல கலைகளையும் பயிற்றி அவனது இளவரசு பட்டாபிஷேக காலத்தில் தமது சீடனாகிய அவனுக்கு க்ஷேமமுண்டாகும்படி ஒரு கவிபாட நினைந்து,

“ஆடுங் கடைமணி நாவசை யாமலகிலமெல்லாம்
நீடுங் குடையிற் றரித்த பிரானென்றும்” னெனப்

பாடி மற்றைய இரண்டடியையும் பாடத் துவக்குமுன், குலோத்துங்கன் தனதாசிரியருக்குத் தான் தாழ்ந்தவனென்பதை உலகோர் அறிய வேண்டுமென்ற அவா மிகுதியால் மற்றைய இரண்டடிகளையும் நித்தநவம்

“பாடுங் கவிப்பெருமா னொட்டக் கூத்தன் பதாம்புயத்தைச்
சூடுங் குலோத்துங்கச் சோழனென்றே என்னைச் சொல்லுவரே”

என்று பாடி முடித்தான். பின்னர் விக்கிரமசோழ மகாராஜனுக்கு நிரியாண காலம் நெருங்கியதும், அவரது புதல்வரையும், புலவர் பெருமானையும் அருகிலழைத்துப் புதல்வனை நோக்கிப் புலவர் பெருமானின் ஆணைப்படி நடத்தல்வேண்டும் என்றும் அவரே அவனுக்குப் பிரதிபிதா என்றும் உபதேசித்துப் புலவரை நோக்கிப் ‘புதல்வனைக் காப்பதுமதுபாரம்’ என்று கூறித் தேகவியோகமானன். பின்னர் அவருக்குச் செய்யவேண்டிய கடமைகளை முடித்துத் “தந்தை சொன்மிக்க மந்திரமில்லை” என்னும் வாக்கியத்திற்கிலக்காகக் குலோத்துங்கன் நமது புலவர் பெருமானைத் தனது சிம்மாஸனத்திருத்தி அவர்தம் கீழிருந்து அரசு செலுத்தி வந்தான். அச்சமயம் கூத்தர் குலோத்துங்க சோழன்மீது பிள்ளைத் தமிழ், உலாமுதலியனபாடி மகிழ்வித்திருந்தனர். பின்னர் குலோத்துங்க சோழனுக்குக் கல்யாண மகோத்ஸவம் செய்ய உத்தேசித்துத் தாமே பாண்டிநாடடைந்து பாண்டியன் மகளை மணமுடித்தனர். அப்போது செங்குந்தர் திருக்கை வழக்கம் என்னும் பெருநூலைப் பாடியருளிய புகழேந்திப் புலவரும் உடனிருந்ததாகக் காணப்படுகிறது. ஆனால், அவர் தாம் செய்த நளவெண்பாவைக் குலோத்துங்கன் சபையில் அரங்கேற்றும்போது,

"மல்லிகையே வெண்சங்கா வண்டூத"

என்னும் தலைப்பையுடைய பாடலைப் பாடியதும் புகழேந்தியார் மீது கூத்தருக்கிருந்த பகைமையால் அப்பாடலுக்குக் குற்றம் கூறினர் என்றும், அது காரணங்கொண்டு ஒட்டக்கூத்தரைக் கொல்ல நினைந்து பாராங்கல்லுடன் கூத்தர் படுக்கை அறையில் புகழேந்தியார் ஒளித்திருந்தாரென்றும், அதுபோது கூத்தரின் பத்தினியார் உண்ண அழைத்ததாகவும், அதற்கவர் புகழேந்யார் பாடிய நளவெண்பாப் பாடலில் நாலைந்தைப் பிழிந்து கொடுத்தாலும் உண்ணேனென்று கூறியதாகவும், அது கேட்ட புகழேந்தியார் மனங் களிகூர்ந்து கூத்தரைக் கட்டித் தழுவியதாகவும் கட்டுக்கதையொன்று விநோதரச மஞ்சரியில் காணப்படுகின்றது. இப்புலவர்கள் காலத்திற்கு முந்தியேயுள்ள மணிவாஸகப் பெருமான் திருச்சிற்றம்பலக் கோவையாரில்,

மல்லிகைப் போதில் வெண்சங்கம் வண்டூத

என்றும், பெரியாழ்வார் திருமொழியில்,

எல்லியம்போ திருஞ்சிறைவண் டெம்பெருமான் குணம்பாடி
மல்லிகை வெண்சங்கூது மதிலரங்க மென்பதுவே

என்றும், எடுத்தாண்டிருக்க, அவைகளைத் தெரிந்துகொள்ளாது ஒட்டக்கூத்தரும், புகழேந்திப்புலவரும் தருக்கித்தார்களென்று எழுதி இருக்கும் கட்டுக்கதை பொருந்தாது. இதை விரிக்கிற் பெருகுமாதலால் இம்மட்டோடு நிறுத்திச் சமயம் வாய்த்த பொழுது விரிப்பாம்.

இனி, நமது புலவர் பெருமான் குலோத்துங்க சோழனது ஆட்சிகால முழுமையும் கீர்த்தியுடனிருந்து அவருக்குப் பின்பட்டமெய்திய அவர் குமாரன் இராஜராஜ சோழனது காலத்திலும் கவிச்சக்ரவர்த்தியாய் விளங்கி அவ்வரசன் மேல் உலா முதலான பல பிரபந்தங்கள் பாடி வாழ்ந்து வருநாளில், அவ்வரசனுடன் திருக்குடந்தை (கும்பகோணம்) வந்திருந்த சமயம், அவ்வூர் வீரசிங்காதன மடத்துச் சிவயோகி ஒருவர், சில தேவாரத் திருப்பாசுரங்களைப் பிழைபட ஓதிக்கொண்டு பலியேற்று வரும்போது, கூத்தர் அச்சங்கமரை நோக்கிப் பிழைபடக் கூறுவதென்னை என வினவ, ஜங்கமர் மறுத்துப் பேசக் கூத்தர் கோபங்கொண்டு ஜங்கமரைப் புடைக்க ஜங்கமர் உயிர்நீத்தார். உடனே வீரசிங்கா



தன மடத்துச் சிவயோகியாரெல்லாரும் புடை சூழ்ந்துகொண்டு கூத்தரைக்கொல்லக் கருதி அவரைத் தங்களிடம் அனுப்பும்படி கேட்டனர். அதற்கு அரசன் சம்மதியாது தனது புதல்வனை மூடுசிவிகையில் வைத்தனுப்பினன். சிவிகையைக் குறித்தவிடத்தில் வைத்துத் திறந்து பார்க்கும்பொழுது அரசகுமாரனாக இருப்பதறிந்து அவனைக் கொல்லாமல் விட்டு மறுபடியும்அரசனிடம் சென்று ஒட்டக்கூத்தரைத் தருதி எனக் கேட்க, கூத்தர் தாமே வருவதாகக் கூறிக் கொலைக் களஞ்சேர்ந்து அங்கிருந்த காளி கோவிலினுட் புகுந்து காளி தேவியினருளால் தக்கயாகபரணி பாடி இறந்த ஜங்கமரையு மெழுப்பித் தானும் உயிர் தப்பித் தன்னரசனிடம் வந்தமர்ந்திருந்தார். இவ்விரிவை இற்றைக்கு 280 வருடங்களுக்கு முன்னே இபற்றப்பட்டிருக்கிற வீரசிங்காதன புராணம் அகளங்கச் சருக்கத்தில் காணலாம்.

இது நிற்க, மற்றொரு சமயம் ஆவூர்ச் செங்குந்தர்கள் ஒன்று சேர்ந்து தங்கள் குலவண்மையைப் பற்றி ஒரு பிரபந்தம் பாடித் தரும்படி கேட்க, அதற்கவர் உடன்படாதது கண்டு சினந்து கூத்தரைக் கொல்ல நினைக்கையில் கூத்தர் சோமாசியாண்டார் என்னும் அந்தண சிரேஷ்டரின் அகம்புக, அந்தணர் கூத்தருக்குப்பதிலாகத் தமது புதல்வனையோர் பேழையிலடக்கம் செய்து அவ்வூர்ச் செங்குந்தரிடம் கொடுத்தார். அவர்களப்பேழையைத் திறந்து பார்த்து அந்தணச் சிறுவனை அனுப்பிவிட்டுக் கூத்தரைத் தருதி என அந்தணரிடம் கேட்க, கூத்தர் தாமே எதிர்வந்து ஆவூர்ச் செங்குந்தரை நோக்கி உங்களில் ஆயிரத்தெண்மர் (1008) சிரங்களைக் கொய்து சிம்மாஸனமிட்டால் அதன் மீதிருந்து உங்களாயுதமாகிற ஈட்டியைச் சுட்டி ஓர் பிரபந்தம் பாடி முடிக்கிறேனென, அதற்கவர்களும் சம்மதித்து ஓர் சுபதினத்தில் உறந்தைமா நகரின்கண் கூத்தர் கூறியபடி சிரச்சிங்காதனமிட்டு அவருக்கறிவித்தனர். கூத்தர் தன்னரசனோடும் பல வித்வான்களோடும் நகரிலுள்ள ஜனங்கள் புடைசூழ வந்து சிரச்சிங்காதனத்தமர்ந்து வாணியருளால் செங்குந்தரின் படையாகிய ஈட்டியைச் சுட்டி எழுபது பாடல் கொண்ட ஓர் பிரபந்தத்தைப் பாடி முடித்துப் பின்னர் அற்றதலைகள் அவ்வவற்றின் உடல்களோடு ஒட்டிக்கொள்ளுமாறு எழுப்பெழுபது என்னும் ஓர் தெய்வீகப் பிரபந்தத்தையும் பாடியருளினார். பின்னர் அங்கு குழுமி

இருந்த செங்குந்தரும் மற்றுமுள்ளோரும் தத்தம் இருக்கையேகினர். இச்சரித்திர விரிவை நாம் அச்சிட்டு வெளிப்படுத்தி இருக்கிற செங்குந்தர் பிரபந்தத்திரட்டு என்னும் நூலில் காண்க. பின்னர் ஒட்டக்கூத்தர் இராஜராஜ சோழனுடன் சிலகாலமிருந்து தமது (97)-ம் வயதில் ஆவணிமாதம் வளர்மதியும் உத்திராட நக்ஷத்திரமும் கூடிய சுபதினத்தில் ஊற்றத்தூரின் கண்ணே பரிபூரணமடைந்தார்.

சகோதரர்களே! நம் குலப்பெருமையை உலகோரறிய மெய்ப்பிப்பான் பொருட்டுச் செங்குந்த குலமணிகளாலிட்ட சிரச்சிங்காதனத்தமர்ந்து, ஈட்டி எழுபது, எழுப்பெழுபது என்னும் தெய்வீகப் பிரபந்தங்களைப் பாடி நம் குலம் தழைக்கச்செய்த நமது குலப் பெரியாராகிய ஒட்டக்கூத்தர் பெருமான் பரிபூரணமடைந்த திருநக்ஷத்திரம் நிகழும் பிரபவ ஹூ ஆவணிமாதம் 22-ந்தேதி (7-9-1927) புதவாரம் வருகிறபடியால், அன்றைய தினம் ஒவ்வொரு செங்குந்தரும் புலவர் பெருமானின் குருபூஜை மகோத்ஸவத்தைச் செய்து, அந்நாளை ஓர் நன்னாளாகக் கொண்டாட வேண்டுமென்று தாழ்மையுடன் கேட்டுக் கொள்ளுகிறேன்.

ஆறிரு தடந்தோள் வாழ்க அறுமுகம் வாழ்க வெற்பைக்
கூறுசெய் தனிவேல் வாழ்க குக்குடம் வாழ்க செவ்வேள்
ஏறியமஞ்ஞை வாழ்க யானைதன் அணங்கு வாழ்க
மாறிலா வள்ளி வாழ்க வாழ்க சீரடியாரெல்லாம்.

செங்குந்தப் படையோன் திருவடி வாழ்க.

## அனுபந்தம்

### ஆராய்ச்சிக் குறிப்புக்கள்.

(1) ஒட்டக்கூத்தர் விக்கிரம சோழனது ஆட்சிகாலத்தின் பிற்பகுதியிலும் அவன் புத்திரன் குலோத்துங்க சோழன் ஆட்சிகால முழுமையும், அவனது புத்திரன் இராஜராஜ சோழன் ஆட்சிகால முற்பகுதியிலும் இருந்தவர். விக்கிரம சோழன் கி. பி. 1118 முதல் 1132 வரையில் அரசாண்டவனாதலால் கூத்தரது காலம் 800 வருடங்களுக்கு முந்தியது எனக் கணக்கிடப்படுகிறது.

(2) கப்பனென்றும், கும்பனென்றும், காழியொட்டக்கூத்தன் என்றும், பெருந்திரட்டில் பிற்கால வெண்பா ஒன்றை ஆதாரமாகக்



கொண்டு கூத்தர் சீகாழியிலே பிறந்தவர் என்பது கூறுவர் அது பொருந்தாது. காளியொட்டக்கூத்தன் என்பது காழியொட்டக்கூத்தனென மருவி வழங்குகிறது.

சென்று செவியளக்குஞ் செம்மையவாய்ச் சிந்தையுள்ளே
நின்றளவி லின்ப நிறைப்பவற்றுள் — ஒன்று
மலரிவருங் கூந்தலார் மாதர் நோக்கொன்று
மலரிவருங் கூத்தன்றன் வாக்கு.

என்று தண்டியலங்காரச் செய்யுளொன்று காணப்படுவதால் ஒரு சாரார் கூத்தர் மலரி என்னும் ஊரிலே பிறந்தவர் என்று கருதுகிறார்கள். மலரி என்னும் ஊர், சோழநாட்டிலிருப்பதாக இன்னும் புலனாகவில்லை. அன்றியும் சில கையேட்டுப் பிரதிகளில் மேலே கண்ட பாட்டின் பின்னடி இரண்டும்,

மணமமருங் கூந்தலார் மாதர் நோக்கொன்று
மணவைவருங் கூத்தன்றன் வாக்கு.

என்று காணப்படுவதாலும், மணவை (மணக்குடி) என்னும் ஊரில் ஒட்டக்கூத்தன் வீடு என்று பரம்பரையாக இன்னும் உளவாதலாலும், அவ்வூரில் பண்டைக்காலந்தொட்டே செங்குந்தர் வசித்து வருவதாலும், கூத்தரது ஊர் மணக்குடி என்றே துணிய இடந்தருகிறது.

(3) தமிழ் நாவலர் சரிதையில் சரஸ்வதி தம்பலங் கொடுக்கக் கவிதையுண்டாக்கிய கூத்த முதலியாரை அரும்பைத் தொள்ளாயிரம் பாடும்போது விக்கிரம சோழன் கேட்டு ஒருகவியை ஒட்டச்சொல்லென்று பாடியது. என்ற தலைப்பொன்று காணப்படுவதாலும் கூத்தர் முதன்முதலிபற்றிய சரஸ்வதியந்தாதி 3-வது செய்யுளில்,

உரைப்பாருரைக்குங் கலைகளெல்லா மெண்ணி லுன்னையன்றித்
தரைப்பாலொருவர் தரவல்லரோ தண்டரளமுலை
வரைப்பாலமுது தந்திங்கெனை வாழ்வித்த மாமயிலே
விரைப்பா சடைமலர் வெண்டாமரைப்பதி மெல்லியலே,

என்று கூறி இருப்பதாலும் அவராலியற்றிய தக்கயாகபரணி வாழ்த்துக் கவியில் "ஆற்றங்கரையில் அரசிருந்தாள் வாழியே, என்று கூறி இருப்பதாலும், அவர் கூறியபடி ஹரிசொல் நதியின் தென்கரையில் சரஸ்வதி ஆலயமும் அதனுள் கூத்தரால்

பிரதிஷ்டை செய்யப்பட்ட சாரதா மூர்த்தமும் ஒட்டக்கூத்தர் பிம்பமும் இற்றைக்கும் இருக்கின்றனவாதலாலும், சாஸ்வதியாலயம் இருக்கின்ற ஊருக்கு ஒட்டக்கூத்தனூர் என்று பெயர் வழங்கி வருவதாலும், அவ்வூரில் பண்டைக்காலந் தொட்டு சுமார் 20 வருஷத்துக்கு முன் வரையில் செங்குந்தர்கள் ஏராளமாக வசித்து வந்து செங்குந்த விநாயகர் என்ற ஒரு விநாயகர் கோவிலும் கட்டி வாழ்ந்திருந்தனராதலாலும், இன்னும் பல ஆதாரங்களுளவாதலாலும் கூத்தர் வாணியருள்பெற்று வாழ்ந்தனர் என்பது புலனாகின்றது. மேலே கண்ட ஒட்டக்கூத்தனூர் என்பது S. I. R. ரயில் வேயில் மாயவரம் கிளையிலுள்ள பூந்தோட்டம் என்னும் ஸ்டேஷனுக்குத் தென் மேற்கில் கால் மைல் தூரத்திலிருக்கிறது.

ஒட்டக்கூத்தரால் முதன் முதலின் இயற்றப்பட்ட, சரஸ்வதி யந்தாதி என்னும் நூலைக் கம்பர் இயற்றியதாகக் கூறி அச்சிட்டுள்ளார்கள். அது பொருத்தமன்று. கம்பர் சரஸ்வதியை பூஜித்து அவரால் அனுக்கிரகம் பெற்றாரென்று எங்கேனும் கூறி இருப்பதாகத் தெரியவில்லை.

4. தக்கயாக பரணியின் இறுதியில்

வாழி கவிச்சக்கரவர்த்தி கூத்தனே
கூத்தன் கவிச்சக்கரவர்த்தி வாழியே

எனக் கூறியிருப்பதினால் கூத்தர் கவிச்சக்கரவர்த்தி என்னும் பட்டம் பெற்றிருந்தார் எனத் தெரியவருகிறது.

எத்தனை புலவரோமுன் னிறைவரை வயஞ்செய்துற்றார்
அத்தனை பேருளாரு மருந்தமி ழொட்டக்கூத்தன்
ஒத்தவர் முடிமேல் தந்தாளுறவைத்த தில்லையில்லை
இத்தனை யதிட்டமன்னோற் கிசைந்தமை யேற்றந்தானே.

என வரும் புலவர் புராணச் செய்யு ளொன்றினாலும் குலோத்துங்கன் பாடியதாக முன்னே குறிப்பிட்ட செய்யுளின் இரண்டடிகளாலும் நமதுபுலவர் பெருமானின் கீழிருந்து குலோத்துங்கன் அரசு செலுத்தி வந்தானென்பது புலனாகின்றது.

தி. நா. சபாபதி முதலியார்.

---



# குலத்தொழிற் பகுதி.

## நெசவுத்தொழிலும், நம்மவர்களும்

---

ஒரு நாட்டின் சிறப்பும், வளனும், அந்நாட்டில் வாழும் மக்களின் தொழிலையும் நாட்டின் நில அமைப்பையும் பற்றிநிற்கும். இவ்விரண்டினுள் பிந்தியது, மக்களாலாக்க வல்ல தொன்றன்று; இயற்கையளவில் நிற்பதேயாம். அவ்வியற்கையளவிற் கேற்றவாறு அந்நாட்டில் வாழும் மக்களும் அறிவாற்றல் பெற்றோராவர் என்பது இயற்கைநூல் வல்லார்கண்ட முடிபாகும். அஃது எவ்வாறெனின், ஒரு நாடு தக்க நீர்வள நிலவளங்களையுடையதாய் ஏற்ற பருவங்களைப் பெற்றிருக்குமாயின், அந்நாட்டில்வாழும் மக்களும், உழவுத்தொழில் மிக்காராய், அந்நிலந் தரும்பொருளைக்கொண்டு தங்கட்கு இன்றியமையாதனவற்றைச் செய்துகொள்ளும் திறனுடையராயிருப்பர். அன்றி, அந்நாடு நீர்வள நிலவளங்களிற் குன்றியதாய், உலோகம் முதலிய பொருள்களை யுடையதாயிருக்குமேல், அந்நாட்டில் வாழுநர் அவ்வுலோகங்களாலாய பொருள்களைச்செய்யு மாற்றலுடையராய் அவற்றைக்கொண்டு பண்டமாற்றல் செய்து தங்கட்கு இன்றியமையாதனவற்றைப் பெறுவர். இனி ஒருநாடு அலைகடலுக்கிடையிலேனும் அதற்கு அருகிலேனுமிருக்குமேல், அந்நாட்டினர் அக்கடல் தரும் வளங்களனைத்தையும் ஒருங்கேயுடையராய் அக்கடலிற் பிரயாணஞ் செய்தற் குதவிப்பொருள்களாகிய படகுகள்,கப்பல்கள்முதலியன யாத்தலிற்றிறனுடையராயிருப்பர். அன்றி, ஒருநாடு மலைகளுக்கிடையிலேனும், அல்லது அருகிலேனும் இருக்குமேல் அந்நாட்டினர் அம்மலைதரும் வளங்களான் மிக்காராய் உடல்வலி மிகுதியும்பெற்று முரட்டுத்தனமான பழக்கவழக்கங்களைக்கொண்டவராயிருப்பர். இவ்வாறாக, ஒன்றற்கொன்று மாறுபட்ட நிலநிலைகளையாராயுங்கால் நம் இந்திய நாடானது மேற்கூறிய பல்வகை வளங்களையுமொருங்கே வாய்க்கப்பெற்றதோர் நாடென்பது தெள்ளிதிற் புலப்படும். ஆயினும் பொதுமுறையில் நோக்குங்கால் நம் நாட்டினர்களில் பெரும்

பாலோர் உழவுத்தொழிலையும் நெசவுத்தொழிலையுமே முதற்றொழில்களாகக்கொண்டு, இவைகளின் உதவியால் ஏனைய நாட்டினர்களோடு வாணிபஞ்செய்து வந்தனரென்பது நம் பண்டை நூற்களின் ஆராய்ச்சியாற்போதருகின்றது. இவ்வுலகத்தில் நாம் காணும் தொழில்களனைத்தினுள் உண்ண வுணவு முடுக்க வுடையுந் தரவல்ல உழவு, நெசவு ஆகிய இருதொழில்களுமே மிகச்சிறந்தனவாகும். இவற்றுள் முந்தியதை நம் முன்னோர் பேணியவாறு அத்துணையுயர்வாக நம்மவர் இதுபோது பேணாதொழியினும், நம்மவர்களிற் பெரும்பாலோர் இன்றும் உழவுத்தொழிலையே மேற்கொண் டொழுகுகின்றனர். ஆயினும் இதுபோது நம்மவர்களில் மிகவும் அரிதாகக்காணப்பெறும் நெசவுத்தொழிலைப் பண்டைக்காலத்தில் நம்முன்னோர் எந்நிலையில் வைத்துப்புரந்தனரென்பதைச் சிறிது ஆராய்வோம்.

இவ்வுயர்தொழில்தன்னை யுரிமெனவோம்பி, அத்தொழிற்றுறைகளனைத்தையுங் கற்றுத் துறைபோகிய, நம் இந்தியநாட்டுப் பண்டைமக்கள் இன்றைக்குப் பல்லாயிரமாண்டுகட்கு முன்னர்த்தொடங்கி இருநூறு ஆண்டுகட்கு முன்னர்வரை, இதுபோது நாகரீகத்தினில் மிக்காரெனப் பெயர்படைத்த மேனாட்டாரனைவரும் தாமுடுக்கு முடைகளையுமாக்குவிக்கும் வகையறியாராய், அன்னவர் கைகளையே ஆவலுடன் எதிர்நோக்கிச்சிறந்தனரெனில், நம்முன்னோர் மேற்கொண்டொழுகிய கைத்தொழில்களின் சிறப்பையும் மிகுதியையும் விரித்துரைத்தல் வேண்டாவமையாமன்றோ? எனினும், இதற்குச்சான்றாக நம்மவர்களால் மிகப் பழையகாலங்களில் எழுதப்பெற்றதாகக் கருதப்படும் நூல்களினின்று பல மேற்கோள்கள் காணுதல் எளிதெனினும், நம்மவர்களின் சிறப்பைப்பற்றி நம்மவர்களே கூறியிருப்பது தக்க சான்றாகாதெனக் கூறுவார் தம் கூற்றையடைப்பான், ஈண்டுச் சில மேனாட்டு ஆசிரியர்களின் ஆராய்ச்சியுரைகளையும் மற்றும் பல மேற்கோள்களையுங்காட்டுதும். மேனாட்டார்களின் பழைய நூற்களுள் ஒன்றாயதும் அவர்களால் வேதமெனக்கருதப்படுவதுமான (Bible) பைபிளில், கிருஸ்து பிறத்தற்கு முன்னர்ப் பதினைந்தாம் நூற்றாண்டிற்கும் பதினேழாம் நூற்றாண்டிற்கு முட்பட்ட காலத்தில் நம் நாட்டவர்களுடைய நெசவின் சிறப்பு நன்கு கூறப்பட்டுள்ளது. (Vide the book Job VII



6 Chapter & Exdous XXXV 25th chapter) மற்றும மேனாட்டுச் சரித்திர ஆராய்ச்சி வல்லுநராகிய "தாண்டான்' (Thanton) என்பார் பண்டைக்காலத்து இந்தியர் நாகரீகத்தைப் பற்றிக்குறிக்குங்கால் மிகப்பழைய நாகரீகம் படைத்த எகிப்தியர்களும் மேனாட்டார்களின் நாகரீகத்திற்குப் பிறப்பிடமாகிய "கிரீசு" 'இத்தாலி' முதலிய நாட்டவர்களும் காட்டு மனிதர்களைப்போல் அலைந்து திரிந்த காலத்திற்கு முன்னமே நம்நாட்டவர்கள் செல்வவளத்திற் சிறந்த கைத்தொழில்களில் வல்லுநராய்ச் சிற்பத்திற் கைதேர்ந்தவராய் உழவுத்தொழிலின் உயர்வையுணர்ந்தவராய்ச் சிறந்து விளங்கினரென்றும், நம் நாட்டு அரசர்களும், செல்வர்களும், ஏனைய நாட்டார்கள் வீடு கட்டும் வழியறியாது அலைந்து திரிந்தபோழ்தே மாடமாளிகைகளில் வசித்துக் கைத்தறிகளால் ஆக்குவிக்கப்பெற்ற கண்ணைக் கவரத்தக்க அழகிய உடைகளையணிந்து செல்வவளம்பெற்று தங்கம், வெள்ளி, வைரம், முத்து முதலியவைகளாலாய அலங்கார அணிகள் பலவற்றை உபயோகித்துப் பழக்க வழக்கங்களிலும் சிறந்து விளங்கினரென்றுங் கூறிப்போந்தனர். மற்றும் மேனாட்டுப்பருத்தி நூற்றொழில் வல்லாரும் "பருத்திநூல் நூற்றல்" பருத்திநூல் நெசவு என்பனபற்றி எழுதப்பெற்ற நூற்களுக்கு ஆசிரியராகிய "ஜான்வாட்சன்" (Jhonwatson) என்பார் வணிகத்தில் முதன்மைபெற்றிருந்த இந்திய நாட்டினர்கள் "அலக்சாந்தர்" காலத்திலேயே உயர்ந்த மெல்லிய பருத்திநூற்றுணியை யணிந்து வந்தனரென்றும், ஐரோப்பிய நாட்டவர்கள் இந்திய நாட்டுடைகளை ஓர் அலங்கார அணிகளாகக்கருதிப் பேணிவந்தனரென்றும், இந்தியர்களும் எகிப்தியர்களுமே ஆதியில் நெசவுத்தொழிலில் கைதேர்ந்தனராயிருந்தனரென்றுங் கூறுகின்றார். இத்தகைய உயர்நிலையிலிருந்த நாம் இதுபோது எந்நிலையிலிருக்கின்றோமென்பதைச் சிறிது ஆராய்தல் அவசியமன்றோ? நாம் உணவும் உடையும் ஒருங்கே தரவல்ல உயர்தொழில்களை மறந்தோம்.

ஏனைய நாட்டார் இழித்துரைக்கும் இயல்பினை எய்தினோம். அன்னார்மொழிகளையே அல்லும் பகலும் பயின்று முன்னோர் தேடிய பொருளை முழுதுமிழந்தோம். மேல்நாட்டினர் தம் காலடிபணிந்தோம். பிழைக்கும்வழியை முற்றிலுந்துறந்தோம்.

சேவகத்தொழிலையே சதமெனக் கொண்டோம். உடுக்கும் உடைக்கும் பல்லாயிரமைலுக்கப்பால் உள்ளாரின் உதவியை நோக்கி நிற்கும்நிலையை யெய்தினோம். அந்தோ! எத்தனை இளைஞர்கள், எத்தனைவாலிபர், எத்தனைச்சிறார்கள், எத்தனைக் காளையர், பல்பொருள் விசியும், பழுதிலாது பள்ளியிற்பயின்றும் பட்டம்பெற்றும், பயனிலராயினர். பட்டச்சுவடியைக் கட்டியெடுத்து, வீதிகள்தோறும் வீணிலலைந்தும் வேலையொன்றும் கண்டிலர். என்னே! நெருநல்தோன்றிய நாட்டினர் நாளை நம் நாட்டிற்கு ஆடைகள் அனுப்பாதொழிவரேல் என்னே! நம் நிலையாவது? இலைச்சருகை யெடுத்து 'இடையிலுடுப்பதா? இயற்கையழகை ஏந்திநிற்பதா? என்னோ செய்வது? கைப்பழத்தைவிட்டுத் துறட்டுப்பழத்திற்கு அண்ணாந்து நிற்றல் அறிவுடையார்க்கழகாமோ? இதுபற்றிப்போலும் உலக முவக்கும் உயர்தனிச்செல்வன் காந்தியம்பெருமான், நம்மவர் ஏழ்மையையுள்ளவாறறிந்து, அவர்களதழிவைத், தனதெனக்கருதி, எதிர்காலநிலையைத் தீதிலாதுணர்ந்து, நம்மவர் துயரைத்துடைப்பான், பஞ்சுநூல் நூற்கும் பாவமில் தொழிலையும், அசைவில் செல்வம் அளவிலாதளிக்கும் நெசவுத்தொழிலையும் சிக்கெனப் பிடித்தனன். இனியேனும் நம்மவர்கள் நீண்ட தூக்கத்தினின்றும் விழித்துச் செய்வனசெயப்புகின் ஒருவாறு நாமிழந்தவற்றை மீட்டும்பெறுதலும்கூடும். அவ்வாறு நமது பழயநிலையை அடைவான் முயலுதற்குமுன்னர், நம்மை இத்துணைக்குன்றிய நிலைக்குக் கொண்டுவரத் துணையாயிருந்தவற்றை யாராய்ந்து அவற்றைக்களைந்தெறிதல் இன்றியமையாததாகலின் அவற்றைப் பற்றிச்சிறிது ஆராய்வாம்: நால்வகைப்பட்ட நெசவுகளாகிய 'பருத்தி, பட்டு, நார், கம்பளம் என்பனவற்றுள், இதுபோது மிகச்சுருங்கிய விலையுளதும் மிக்க அவசியமானதுமாய பருத்தி நெசவே பண்டைக்காலத்துமற்றைய நெசவுகளனைத்தினும் பின்னர்த்தோன்றியதெனச் சரித்திரஆராய்ச்சி வல்லார்கூறுவர். ஆயினும் இப்பஞ்சுநூல் நெசவை நம்மவர்கள் மிகப்பழய காலந்தொட்டுக் கையாண்டுவந்தனரென்பது மேற்கூறியவாற்றான் மேனாட்டார்க்கும் ஒப்பமுடிந்ததொன்றாயிற்று. இவ்வுலகின் வியாபார மேடைகளையும் தம் வயமாக்கிக்கொண்ட மேனாட்டவர்கள் பதினான்காம் நூற்றாண்டிலேயே நம்மவரிடத்திலிருந்து அதனைக்



கற்றுப்போய்ப் பயின்று வந்தனரெனினும் அத்துறையில் நம்மவர்களைச் சிறிதும் வெல்லுமாறு அறிந்திலர். ஆயினும் நாளடைவில் நூற்றாண்டினிடையில் 'பரி' (Bury) என்னும் ஊரினராகிய 'கே' (Kay) என்பார் கையினால் நூனாழி அல்லது நாடாவை எறிதலையொழித்து நாடாவை விரைவிலும், கை நோவாமலும், செலுத்தத்தக்கதோர் வழியைக் கண்டுபிடித்தார். இதனையே இழுநூனாழி யென்பர். (Fly shuttle) இப்புதிய முறையானே நெசவுத்தொழில் மேனாட்டில் விரைவிற் பெருகியதோடு எளிதிலும் உடைகள் வரற்குக் காரணமாயிற்று. மேலும் எளிதாக பாவுபோடும் முறைகளையும் கஞ்சிபோடும் முறைகளையும் புதிது புதிதாகக்கண்டு பிடித்தனர். இவ்வாறு பலதுறைகளிலும் முயன்று பலவித புதுமுறைகளையும், எளியவழிகளையும் தோற்றுவித்து, முடிவில் பலவகைப்பட்ட பொறிகளின் உதவியால் நம்மவர் வாயையும் கையையும் அடக்குமாற்றலைப் படைத்தனர்.

இவர்கள் இவ்வாறு அயராது ஊக்கங்கொண்டு உழைத்துவந்த காலங்களிலெல்லாம் நம்மவர்கள் நம் பண்டை முறைகளையே விடாது கைப்பற்றி இப்புதியமுறைகளிற் சிறிதும் மனஞ்செலுத்தாது ஒழியவே, அவர்கள் நம்மவர்களைக் காட்டிலும் குறைந்த விலைக்குத் துணிகளை விற்கும் ஆற்றல்பெற்று, நம் கைத்தொழிலாளர்களின் ஊக்கத்தைக் குன்றச்செய்து, நம்மவர், வாணிபத்தையும் கைக்கொண்டனர்.

மேலும் ஒரு நாடு கைத்தொழிலிற் செழித்தோங்கி வளரவேண்டுமாயின் அந்நாட்டில் அரசாங்கத்தார், கைத்தொழிற் கல்லூரிகள் பலநிறுவி அவற்றில் பலநாடுகளிலும் காணப்பெறும் புதியமுறைகளைக் கற்பிக்கத்தக்க பல ஆசிரியர்களை நிறுவி, ஏழைமக்களை அவற்றில் இலவசமாகப் பயிற்றித் தொழிலாளர்களைப் பலவகைகளிலும் ஊக்கி, அவர்கட்கு வேண்டிய வசதிகள் செய்துதந்துஉதவுதல்வேண்டும். இவ்வாறு செய்துவரும் நாடுகளே தொழில்முறைகளிற் பெருகியும் வணிகத்திற் சிறந்தும் வளரும். ஆயினும் நம் அரசாங்கத்தினர் இவ்வகை முயற்சிகள் ஒரு சிறிதும் செய்ய முன்வந்தாரில்லை. ஒருவாறு தங்கள் வாணிபத்திற்குக் கேடு வந்துவிடுமோ வென அஞ்சினர்போலும்.

எனவே நம்மவர் கைத்தொழில் பலபுதிய முறைகளானும் பொறிகளின் வலியானும் அரசாங்கத்தார் உதவிக்குறைவானும், நம்மவர் ஊக்கமின்மையானும் பட்டொழிந்த தென்பது பெறற்றாம்.

இனி நாமிழந்த இந்நெசவுத் தொழிலை மீட்டும் பெறுதற்கு நாம் மேற்கொண்டொழுகவேண்டிய முறைகளின்னவென்றும், இடையில் நேர்தற்கேதுவாய இடையூறுக ளிவையென்றும், அவைகளை விலக்கு மாறுகள்இவை யென்றும் நோக்குத லின்றியமையாததாகும்.

இஃது தமிழ்ப்பொழிலிற் கண்டது.

நா. விசுவநாத ஐயர் அவர்கள், கரந்தை.

(தொடரும்)

---

## விகடக்களஞ்சியம்.

(1) **இன்ஸ்பெக்டர்:**—ராமா! உன்னுடைய மார்க்கு என்ன?

**ராமன்:**—60 மார்க்கு சார்.

**இன்ஸ்பெக்டர்:**—என்ன! அந்த விஷயத்திற்கே மொத்த மார்க்கு 60. நீயா! 60 வாங்கினாய்.

**ராமன்:**—இல்லை சார். எங்கள் வாத்தியார் "0"க்கு மதிப்பில்லை என்றார். ஆதலால் "0" போக என்னுடைய மார்க்கு 6.

(2) **ஒருவன்:**—என்னடா! இன்னும் மீசைகூட முளைக்கவில்லை இதற்குள் பீடி பிடிப்பதற்கு அவ்வளவு பெரியவனாய் விட்டாயா?

**பையன்:**—எங்கள் பாட்டிக்கும் கூட தான் மீசை முளைக்கவில்லை, அவர்கள் பெரியவர்களல்லவா?



## விரதப்பகுதி

### விநாயகசதுர்த்தி விரதம்.

*மண்ணுல கத்தினிற் பிறவி மாசற*
*எண்ணிய பொருளெலா மெளிதின் முற்றுறக்*
*கண்ணுத லுடையதோர் களிற்றுமாமுகப்*
*பண்ணவன் மலரடி பணிந்து போற்றுவாம்.*

இவ்விரதம் வருடந்தோறும், ஆவணிமாதம், அமாவாசை கழிந்த வளர்பிறைச் சதுர்த்தி உச்சிப்போது வரையிலுள்ள தினத்தில் செய்யத்தக்கது.

இவ்விரதம்-இந்த பிரபவ௵ ஆவணிமாதம் ௧௫-ஆம் தேதி (31-8-1927) புதன்கிழமை வரும்.

இவ்விரதத்தை மலையரையன் திருமகளாயவதரித்த உமாதேவியார், முருகக்கடவுள், சோமகாந்தன், வேதவியாசர், விஷ்ணு, பிரமன், தக்கன், வல்லாளன், வீமன், உருக்குமாங்கதன், இந்திரன், கிருச்சமதன், திரிபுரன், இந்திராதி தேவர்கள், நளன், சந்திராங்கதன், மன்மதன், உருக்குமணி, ஆதிசேடன், மாபலி, பரசிராமன், இராவணன், அகத்தியர், காசிபர்முதலிய பலர் அநுட்டித்து விரும்பியவரங்களைப் பெற்றதாக நூல்கள் கூறுகின்றன. இவற்றின் விரிவை விநாயகபுராணத்தில் காணலாம்.

இவ்விரதம் இப்பரதகண்டத்தில் மாத்திரமன்றி ஆரியர்போய் வசிக்கும் பர்மா முதலிய பிறதேயங்களிலும் அநுட்டிக்கப்படுகிறது. பரதகண்டத்துள்ளும் பம்பாய் இராஜதானியில், மற்றெல்லாப்பண்டிகைகளுள்ளும் பெரும்பண்டிகையாகக் கொண்டாடப்படுகின்றது. பலவழியிலும் சமயவொழுக்கங்கள் குன்றிக் கிடக்கும் நம் தமிழ்நாட்டில் பலர் இப்பண்டிகையைக் கொண்டாடினும், அநேகர், இது சிறுபிள்ளைகளால் அநுட்டிக்கப்படுவதொன்றென எண்ணிக்கொண்டு அலட்சியஞ் செய்கிறார்கள். அவ்வாறு அலக்ஷியம் செய்வது பெரும்பாவம். ஆகலால் விநாயக சதுர்த்தி விரதம் அநுட்டிக்கவேண்டிய விதத்தை இதில் வெளியிடலாயிற்று.

இவ் விரதமநுட்டிப்போர் மிக்க களிப்புடன் நீராடி நித்திய கருமமுடித்து நியமமுடையராய்ப் பரிசுத்தமான இடத்திற்

சென்று மிருத்திகை (மண்) எடுத்துவந்து அதில், வேர்கள், செல் முதலிய செந்துக்கள், கற்கள் முதலானவைகள் இல்லாத வண்ணம் சோதித்துப் பிசைந்து, பதப்படுத்திச் சிற்பசாத்திரத்திற் கூறியவாறு விநாயகமூர்த்தியின் திருவுருவம் அமைத்துப், பொன்னினாலும் இவ்வாறே ஓர் திருவுருவம் அமைத்து வைத்துக்கொண்டு, சிவாகம முறைப்படி சிரசாதி பாதம் வரையில் நியாசம்= (தொடல்) செய்து ஆசமனம், பிராணாயாமம், பூதசுத்தி முதலானவைகளை நடாத்தி,

''ஏவங்குணவிசேஷண, விசிஷ்டாயாம், சுபதிதௌ, அஸ்மாகம் சகுடும்பானாம், க்ஷேமஸ்தைர்ய, விஜய ஆயுராரோக்கிய ஐஸ்வர்யாணாம், உத்தரோத்தராபி வ்ருத்யர்த்தம், தர்மார்த்த காமமோக்ஷ சதுர்வித பலபுருஷார்த்தஸித்யர்த்தம், கல்போக்த ப்ரகாரேண தியானவாஹனாதி,ஷோடசோபசார பூஜாங்கரிஷ்யே''

என்று சங்கற்பங்கூறிச், சந்தன மரத்தாலாகிய ஓர் வேதிகை (பலகை)யைவைத்து அதன்மீது தண்டுலம் (அரிசி) பரப்பி, அதன்மீது சொர்ணவஸ்திரம் ஒன்றைவிரித்து, அதன்மீது இழை சுற்றி நீர் நிரப்பி இருக்கின்ற பொற்கும்பத்தை ஸ்தாபித்து அதில் அத்தி, ஆல், அரசு, மா, நாவல் என்னும் பஞ்சதளிர்களையும், சுகந்தி, பொன், மரகதம், மாணிக்கம், முத்து, என்னும் பஞ்சரத்தினங்களையும் பெய்து, அக்கும்பத்திற்குச் சந்தனம், புட்பம், அக்ஷதை முதலானவைகளைச் சாத்தி,

''கலசஸ்ய முகேவிஷ்ணு, கண்டேருத்ரஸமாஸ்ரத, மூலே தத்ரஸ் திதோப்ரம்ஹா, மத்யேமாத்ரகணாஸ்மிர்தா, குக்ஷோது சாகராஸர்வே ஸப்தத்வீபாவசுந்தர, ருக்வேதோத யசுர்வேத சாமவேத அதர்வண, அங்கைஸ் சஸஹிதாசர்வே கலஸாம்புஸமாஸ்ரித ஆயேந்து கணேசபூஜார்த்தம் துரிதக்ஷய காரக, சங்கேச யமுனே சைவ, கோதாவரி ஸரஸ்வதி, நர்மதேசிந்து காவேரி, ஜலேஸ்மின் ஸன்னிதிங்குரு'' என்று கும்பபூஜைசெய்து,

அக்கும்பத்திற்கு மேற்றிசையில் யந்திரமிட்டு, முன்செய்து வைத்திருக்கும் பிருதிவி மூர்த்தியை எழுந்தருளச்செய்து, மற்றொரு வேதிகையில் சொர்ணமூர்த்தியை எழுந்தருளச்செய்து, முன்பு சேகரித்துவைத்திருக்கும் பூஜாதிரவியங்களிலுள்ள குங்குமம், பச்சைகற்பூரம், புட்பம், அறுகு முதலிய பற்பல சுகந்தவர்க்கங்களைக் கலந்து, முன்பு சுத்தப்படுத்திவைத்த மணிவட்டகைகளில் நிரப்பி,மற்ற வட்டகைகளில் கங்கைமுதலிய சுத்ததீர்த்தம, அரிசி, பால், தருப்பை நுனி, மலர், வெண்கடுகு, நெல், எள்முதலிய திரவியங்களை விதிப்படி அமைத்து, அருக்கியம், பாத்தியம், ஆசமனம் முதலியவைகளை மந்திர பூர்வமாகச்செய்து கரத்திற் புஷ்பமும் அக்ஷதையுங் கொண்டு,



''த்யாயேத்கஜானனம் தேவம் தப்தகாஞ்சனஸந்நிபம்,சதுர்ப்புஜம் மஹாகாயம், ஸர்வாபரண பூஷிதம், தண்டாக்ஷமாலாபரசு, பூர்ணமோதகதாரிணம், பாசாங்குசதரம் தேவம்,த்யாயேத்ஸித்தி விநாயகம், ஸ்ரீ ஸித்திவிநாயகாயநம தியானம் ஸமர்ப்பயமி,''என்று சிந்தித்து,

''விநாயக நமஸ்தேஸ்து, கௌரீமலஸமுத்பவ, இமாம் க்ருதாம் மயாம் பூஜாம், க்ருஹாணகணநாயக. ஸ்ரீ கணநாயகாயநம ஆவாஹனம் ஸமர்ப்பயாமி'' என்று ஸ்தாபனஞ்செய்து,

''மௌக்திகை புஷ்பராகஸ்ச, நாநாரத்நவிராஜிதம், திவ்ய ஸிம்ஹாசனம் சாருப்ரீத்யர்த்தம் ப்ரதிக்ருப்ஹதாம் ஸ்ரீ விநாயகாயநம ஆஸனம் ஸமர்ப்பயாமி'' என்று பீடமிட்டு,

''அர்க்யம் க்ருஹாணதேவேச, கணாதிப கஜானன, கந்ததூர்வாக்ஷதைர்யுக்தம், கங்காஜலமிதம் சுபம், ஸ்ரீ கஜானனாயநம அர்க்யம் ஸமர்ப்பயாமி'' என்று அர்க்யம் கொடுத்து,

''கௌரீபுத்ரநமஸ்தேஸ்து, சங்கரப்ரியநந்தன: பகத்யாபாத்யமபாதத்தம், க்ருஹாணசுரஸத்தம, ஸ்ரீகௌரீபுத்ராயநம பாத்யம் ஸமர்ப்பயாமி'' என்று பாத்யம் கொடுத்து,

''அநாதநாதசர்வேச, கீர்வாண சுரபூஜித, நிர்மலம் கந்த ஸம்யுக்தம், க்ருஹாணஸமனம்விபோ, ஸ்ரீ சர்வேசாயநம ஆசமனீயம் ஸமர்ப்பயாமி'' என்று ஆசமனம் கொடுத்து,

''ததிக்ஷீரஸமாயுக்தம், மத்வாஜ்யேனஸமன்விதம், மதுபர்க்கம் க்ருஹாணேதம், கஜவக்த்ரநமோஸ்துதே, ஸ்ரீ கஜவக்த்ராயநம, மதுபர்க்கநைவேத்யம் ஸமர்ப்பயாமி'' என்று தேன், பால், பழம் முதலியவைகளைச் சாமானியமாக நிவேதித்து,

"ஸ்நானம் பஞ்சாம்ருதைர்திவ்ய, சுருஷ்வசுரஸத்தம, பக்த்யாதுப்யம் மயாதத்தம், விக்னராஜ நமோஸ்துதே, ஸ்ரீ விக்னராஜாயநம", என்று தயிரும் பால் பஞ்சாமிர்த முதலியன-அபிஷேக திரவியங்களால் வபிஷேகஞ் செய்து,

"கங்காதிஸர்வதீர்த்தேப்ய, ஆஹ்ருதைர் நிர்மலைஸ்சுபை, வாஸிதைருதகைர்தேவ, ஸ்னபயாமிகஜானன, ஸ்ரீகஜானனாயநம, சுத்தோதகஸ்நானம் சமர்ப்பயாமி"என்று கங்கை முதலிய சுத்த சலத்தால் அபிஷேகஞ்செய்து,

"ரக்தவஸ்த்ரம் த்வயம்தேவ, கௌரீபவ பவப்ரபோ, க்ருஹாணேதம் மயாதத்தம், விக்னராஜநமோஸ்துதே, ஸ்ரீ விக்னராஜாயநம வஸ்திரயுக்மம் சமர்ப்பயாமி" என்று நல்ல இரண்டு பீதாம்பரங்களை யுடுத்தி,

"உபவீதம் ப்ரம்மசூத்ரம், ப்ரம்ஹணா நிர்மிதம் புரா, நாகயக்ஞோப வீதேதம், க்ருஹாண கணநாயக-ஸ்ரீ கணநாயகாயநம யக்ஞோபவீதம் ஸமர்ப்பயாமி" என்று பூணூல் தரித்து,

"சந்தன கருகற்பூர, ம்ருகநாபி ஸமன்விதம், கந்தம்தார்ஸ்யாமி விக்னேச, ஸர்வாபீஷ்டப்ரதாயக-ஸ்ரீ விக்னேசாயநம கந்தாந்தாரையாமி" என்று திருமேனி முழுவதும சந்தனத்தை அப்பி,

"அக்ஷதான் தவளாம் சுப்ரான், ஹரித்ராமிஸ்ரிதானபி, மயாஸமர்ப்பிதான்தேவ, க்ருஹாணத் விரதானன ஸ்ரீஸர்வபீஷ்டப்ரதாயகாயநம அக்ஷதாம் ஸமர்ப்பயாமி" என்று அக்ஷதை=(மஞ்சள் அரிசி) பொற்சுண்ணம், பூந்தாதுமுதலியவற்றைச் சாத்தி,

"சுகந்தீனி சுபுஷ்பாணி, ஜாஜீகுந்தமுகானிச ஏகவிம்சதிபுஷ்பாணி, க்ருஹாணத்வம் விநாயக, ஸ்ரீ விநாயகாயநம புஷ்பாணி பூஜையாமி" என்று, உக. மலர்களைச்சாத்தி,

ஓம் கணேசாயநம, பாதௌ பூஜையாமி-பாதம்
ஓம் விக்னராஜாயநம, ஜானுநீ பூஜையாமி - முழந்தாள்
ஓம் ஆகுவாஹனாயநம, ஊரும் பூஜையாமி · தொடை
ஓம் ஏரம்பாயநம, கடிம் பூஜையாமி - நிதம்பம்
ஓம் தேவதேவாயநம, நாபிம் பூஜையாமி - நாபி
ஓம் லம்போதராயநம, உதரம் பூஜையாமி - வயிறு



ஓம் கணநாயகாயநம, ஹிருதயம் பூஜையாமி - இருதயம்
ஓம் ஸ்தூலகண்டாயநம, கண்டம் பூஜையாமி - கண்டம்
ஓம் ஸ்கந்தாக்ரஜாயநம, ஸ்கந்தௌ பூஜையாமி - கழுத்தடி
ஓம் சதுர்ப்புஜாயநம, புஜௌ பூஜையாமி - தோள்
ஓம் பாசஹஸ்தாயநம, ஹஸ்தாம் பூஜையாமி - உள்ளங்கை
ஓம் கஜவக்த்ராயநம, வக்த்ரம் பூஜையாமி - நாசி அல்லது முகம்
ஓம் விக்னஹந்த்ரேநம, நேத்ரே பூஜையாமி - கண்
ஓம் சூர்ப்பகர்ணாயநம, கர்ணௌ பூஜையாமி - காது
ஓம் ஏகதந்தாயநம, தந்தம் பூஜையாமி - தந்தம்
ஓம் குமாரகுருவேநம, சிரம் பூஜையாமி - சிரம்
ஓம் - சர்வேஸ்வராயநம, சர்வாங்காணி பூஜையாமி - சர்வாங்கம்.

என்று அங்கபூஜை செய்து,

ஓம் சுமுகாயநம, மாசிப்பத்திரம் பூஜையாமி - மாசிப்பத்திரம்
ஓம் கணாதிபதயேநம, பிரங்கராஜபத்ரம் பூஜையாமி-கரசாங்கண்ணி
ஓம் உமாபுத்ராயநம, வில்வபத்ரம் பூஜையாமி - வில்வம்
ஓம் கஜானனாயநம, தூர்வபத்ரம் பூஜையாமி - அருகு
ஓம் லம்போதராயநம, பதரீபத்ரம் பூஜையாமி - இலந்தை
ஓம் ஹாசூனவேநம, துத்தூரபத்ரம் பூஜையாமி - ஊமத்தை
ஓம் கஜகர்ணாயநம, துளசிபத்ரம் பூஜையாமி - துளபம்
ஓம் குகாக்கிரசாயநம, காமஞ்சரிபத்ரம்பூஜையாமி - நாயுருவி
ஓம் ஏகதந்தாயநம, புரஹதீபத்ரம் பூஜையாமி - சிறுவழுதி
ஓம் கஜவக்த்ராயநம, சமிபத்ரம் பூஜையாமி - வன்னி
ஓம் சுராக்ரகண்யாயநம, தேவாதாரபத்ரம் பூஜையாமி - மந்தாரை
ஓம் பாலசந்த்ராயநம, மருவபத்ரம் பூஜையாமி - மரு
ஓம் விகடாயநம, கரவீரபத்ரம் பூஜையாமி - அலரி
ஓம் விநாயகாயநம, திருமோற்பலபத்ரம் பூஜையாமி - கோங்கு
ஓம் கபிலாயநம, அர்க்கபத்ரம் பூஜையாமி - வெள்ளெருக்கு
ஓம் பின்னதந்தாயநம, அர்ச்சுனபத்ரம் பூஜையாமி - மருதம்
ஓம் பத்னிஹீனாயநம, விஷ்ணுகிராந்திபத்ரம் பூஜையாமி - விஷ்ணு [கிராந்தி
ஓம் வடவேநம- தாடிமபத்ரம் பூஜையாமி - மாதுளை
ஓம் சூர்ப்பகர்ணாயநம, ஜாஜீபத்ரம் பூஜையாமி - ஜாதிமல்லி
ஓம் மூஷிகவாகனாயநம, கண்டலேபத்ரம் பூஜையாமி - தாழை
ஓம் சித்திவிநாயகாயநம,சிந்துவாரபத்ரம் பூஜையாமி-வெண்ணொச்சி
ஓம் சர்வசித்தி ப்ரதாயகாயநம, ஏகவிம்சதிபத்ராணிம் பூஜையாமி - சகலமும் கலந்தது.

என்று, இருபத்தொரு மந்திரங்களால் அருசித்துப் பின்பு மல்லிகை, முல்லை, வெள்ளெருக்கு, சண்பகம், புன்னை, நந்தியா

வட்டம், பாடலம், கடுக்காய், தும்பை, செம்பருத்தை, நீலோற்பலம், வெண்டாமரை, செந்தாமரை, நெய்தல் முதலிய பற்பல பூக்களைக் கொண்டருச்சித்து,

ஓம் விநாயகாயநம
ஓம் விக்னராஜாயநம
ஓம் கணநாதாயநம
ஓம் கஜானனாயநம
ஓம் மஹோதராயநம
ஓம் மஹாதேவாயநம
ஓம் ஸனித்காஞ்சனஸமத்யுய்யேநம
ஓம் ஏகதம்ஷ்டோத்கடாயநம
ஓம் தேவாயநம
ஓம் கஜவக்த்ராயநம
ஓம் மஹாபலாயநம
ஓம் நாகயக்ஞோபவீதினேநம
ஓம் நாகாபரணபூஷிதாயநம
ஓம் ஸர்வார்த்தஸம்பதாதாராயநம
ஓம் கணத்யக்ஷாயநம
ஓம் வரப்ரதாயநம
ஓம் ருத்ரஸ்யதன்யாயநம
ஓம் உதாராயநம
ஓம் நாயகாயநம
ஓம் ப்ரமதாதிபாயநம
ஓம் பத்மராகத்வதயேநம
ஓம் ஸோமாயநம
ஓம் ரக்தமால்யானுலேபனாயநம
ஓம் அபலாயநம
ஓம் பாலரூபிணேநம
ஓம் சுமுகாயநம
ஓம் சுரப்ரியாயநம
ஓம் ப்ரபவேநம
ஓம் புண்யாயநம
ஓம் பூர்ணாயநம
ஓம் பூர்ணேதராயநம
ஓம் புண்யகீர்த்தயேநம
ஓம் புராதனாயநம
ஓம் பர்த்ரேநம

ஓம் த்ர்யக்ஷாயநம
ஓம் கனகசுப்ரபாயநம
ஓம் சிவஸாம்யாயநம
ஓம் மஹாதேஜஸேநம
ஓம் மஹாபலபாரக்ரமாயநம
ஓம் ஸர்வக்ஞாயநம
ஓம் க்ஞானஸம்பன்னாயநம
ஓம் ஸர்வாபரண பூஷிதாயநம
ஓம் பாபாபஹேதனாயநம
ஓம் சண்டவிக்ரமாயநம
ஓம் அலக்ஷ்மீமலநாசனாயநம
ஓம் குமாராயநம
ஓம் காரணாயநம
ஓம் காரிதாயநம
ஓம் ஸர்வசித்திப்ரதாயகாயநம
ஓம் விபவேநம
ஓம் ஈசாயநம
ஓம் ஈசபுத்ராயநம
ஓம் ஈஸ்பிதார்த்தப்ரதாயகாயநம
ஓம் ஸ்ரீதாயநம
ஓம் சுபாயநம
ஓம் ஏகதந்தாயநம
ஓம் ஏகவீராயநம
ஓம் அநேகதாயநம
ஓம் ஏகஸ்மைநம
ஓம் ஏகப்ரதேநம
ஓம் விஸ்வப்ரதேநம
ஓம் விஸ்வபுஜேநம
ஓம் விஸ்வஸமைநம
ஓம் விஸ்வக்ஞாயநம
ஓம் ஸர்வபாவனாயநம
ஓம் பாக்யதாயநம
ஓம் பவதாயநம
ஓம் பாகினேநம



ஓம் சிவாயநம
ஓம் சாந்தாயநம
ஓம் ஜகன்நாதாயநம
ஓம் சாஸ்வதாயநம
ஓம் ஸ்வேதபரிதானாயநம
ஓம் கர்த்ரேயநம
ஓம் க்ர்தவேநம
ஓம் க்ருதினேநம
ஓம் க்ருத்யவிதேநம
ஓம் அத்யுக்ராயநம
ஓம் காந்தர்சினேநம
ஓம் க்ருதாந்தகாயநம
ஓம் ஸ்துத்யாயநம
ஓம் ஸ்தோத்ரேநம
ஓம் ஸ்தோகாயநாம
ஓம் ஸ்தோத்ராயநம
ஓம் த்ரயீமயாயநம
ஓம் வேதாயநம
ஓம் வேதாந்தக்ருதேநம
ஓம் வேத்யாயநம

ஓம் போகதாயநம
ஓம் போகபாவனாயநம
ஓம் கவயேநம
ஓம் கார்யாயநம
ஓம் கனீனாயநம
ஓம் வித்யுஷாம்புத்திதாயநம
ஓம் புதாயநம
ஓம் ஓங்காராயநம
ஓம் ப்ரமஹவிதேநம
ஓம் ப்ராம்ஹணாயநம
ஓம் ப்ரம்ஹணேநம
ஓம் ப்ரம்மஹபராயநம
ஓம் பராயநம
ஓம் ஸர்வக்ஞாயநம
ஓம் ஸக்ததயேநம
ஓம் ஸர்வலோகவேத்யாயநம
ஓம் ஸர்வதாயநம
ஓம் சுபகாயநம
ஓம் அவ்யயாயநம
ஓம் சித்திவிநாயகாயநம

என்று, அஷ்டோத்ர சததிவ்ய நாம பூஜை செய்து,

“தாசங்கம் குங்குளம்தூப, முத்தமம் கணநாயக, க்ருஹாண கணராஜேந்த்ர, விக்னஹாரின்னமோஸ்துதே, ஸ்ரீ கணநாயகாய நம, தூபமாக்ராபயாமி” என்று தூபங்கொடுத்து,

“ஸர்வக்ஞ சர்வலோகேச, ஸர்வபூதஹிதோத, க்ருஹாண மங்களம் தீபம், ருத்ரப்ரிய நமோஸ்துதே, ஸ்ரீ சர்வக்ஞாயநம, தீபந்தர்சயாமி” என்று தீபங்காட்டி,

பின்பு மூர்த்திசந்நிதிக்கு எதிரே நிலத்தைச் சதுரமாக மெழுகி அக்ஷதை, புஷ்பம் சாத்தி, பரிகலபாத்திரம் வைத்து, சுத்தான்னம், சித்திரான்னம், மோதகமுதலிய (உக) பலகார வகைகள், தேங்காய், முக்கனி=(வாழை, பலா, மா) முதலிய இருபத்தொரு கனிகள், கரும்பு, பாயாசம், பானக்கம், நீர்மோர் முதலிய பானவர்க்கங்கள், ஆகிய இவைகளைச் சுத்தம்செய்துவைத்து,

"ஓம் அஸ்திராயநம" என்று சலம் புரோக்ஷித்து, "ஓம் கவசாயநம" என்று நீர்வளையக்கட்டி.

"நைவேத்தியம் ஷட்ரஸோபேதம்-பலலட்டு ஸம்யுதம், மோதகம் பரமான்யம்ச-நமஸ்தே விக்னநாசனு. ஸ்ரீ விக்னநாசனுயநம, நைவேத்யம் சமர்ப்பயாமி" என்று நைவேதனம்செய்து,

"தாம்பூலமுத்தமந்தேவ க்ருஹாணசுரபூஜித, கற்பூர்சூர்ண சம்யுக்தம், மயாதத்தமிதம்விபோ, ஸ்ரீ ருத்ரப்ரியாயநம, தாம்பூலம் ஸமர்ப்பயாமி" என்று தாம்பூலம் உபசரித்து,

"ஸதாந்தனதவிக்னேச-புஷ்டலாநிதனுநிச, பூம்யாம்ஸ்திதாணிபகவன், ஸ்வீகுருஷ்வவிநாயக. ஸ்ரீ விக்னேசாயநம, ஸ்வர்ணபுஷ்பம் சமர்ப்பயாமி" என்று தக்ஷிணைவழங்கி

"விக்னராஜ நமஸ்துப்யம் பாபக்ஞானப்ரணுசன, புனரர்க்யம்ப்ரதாஸ்யாமி, க்ருஹாணசுரசத்தம, ஸ்ரீ விக்னராஜாயநம, புனரர்க்யம்ஸமர்ப்பயாமி" என்று அர்க்கியங்கொடுத்து,

| | |
|---|---|
| ஓம் கணுதிபாயயநம | தூர்வாயுக்மம்பூஜையாமி |
| ஓம் உமாபுத்ராயநம | தூர்வாயுக்மம்பூஜையாமி |
| ஓம் அகநாசாயநம | தூர்வாயுக்யம்பூஜையாமி |
| ஓம் விநாயகாயநம | தூர்வாயுக்மம்பூஜையாமி |
| ஓம் ஈஸ்வரபுத்ராயநம | தூர்வாயுக்மம்பூஜையாமி |
| ஓம் விக்னராஜாயநம | தூர்வாயுக்மம்பூஜையாமி |
| ஓம் ஏகதந்தாயநம | தூர்வாயுக்மம்பூஜையாமி |
| ஓம் இபவக்திராயநம | தூர்வாயுக்மம்பூஜையாமி |
| ஓம் ஆகுவாஹனுயநம | தூர்வாயுக்மம்பூஜையாமி |
| ஓம் குமாரகுருவேநம | தூர்வாயுக்மம்பூஜையாமி |
| ஓம் சுமுகாயநம | தூர்வாயுக்மம்பூஜையாமி |
| ஓம் சுராக்கிரகண்யாயநம | தூர்வாயுக்மம்பூஜையாமி |
| ஓம் ஸ்தூலகண்டாயநம | தூர்வாயுக்மம்பூஜையாமி |
| ஓம் குகாக்ரசாயநம | தூர்வாயுக்மம்பூஜையாமி |
| ஓம் லம்போதராயநம | தூர்வாயுக்மம்பூஜையாமி |
| ஓம் பின்னதந்தாயநம | தூாவாயுக்மம்பூஜையாமி |
| ஓம் விசாலாக்ஷினேநம | தூர்வாயுக்மம்பூஜையாமி |
| ஓம் காமரூபியேநம | தூர்வாயுக்மம்பூஜையாமி |
| ஓம் பாலசந்த்ராயநம | தூர்வாயுக்மம்பூஜையாமி |
| ஓம் வக்ரதுண்டாயநம | தூர்வாயுக்மம்பூஜையாமி |
| ஓம் சர்வசித்திப்ரதாயகாயநம | தூர்வாயுக்மம்பூஜையாமி |



என்று சந்தனத்திற்றோய்த்த இரண்டிரண்டு அறுகினுல் இந்த இருபத்தொரு திருநாமங்களையுஞ் சொல்லி அருச்சித்து,

"நமஸ்தே தேவதேவேச, நமஸ்தேகணநாயக, நீராஞ்சனம் ப்ரஸ்யாமி, ப்ரசன்னுேபவமேப்ரபோ, ஸ்ரீ தேவதேவாயநம. நீராஞ்சனம் சமர்ப்பயாமி" என்று ஆலத்திசுற்றி,

"ஆகுவாஹனதேவேச, விஸ்வவ்யாபின்கஜானன, ப்ரதக்ஷிணம் கரோமித்வாம், மமத்வம்ஸன்னிதிம்குரு, ஸ்ரீ ஆகுவாஹனுயநம, ப்ரதக்ஷிணம் ச்மர்ப்பயாமி" என்று வலம்வந்து,

"நமஸ்தேகஜவக்த்ராய, நமஸ்தேகணனுயக, நமஸ்தேதேவதேவேச, கௌரிபுத்ரநமோஸ்துதே, ஸ்ரீ கௌரீபுத்ராயநம, நமஸ்காரம் ஸமர்ப்பயாமி" என்று தீர்க்கதண்டஞ்செய்து,

"தேவதானவகோடீர, மணிரஞ்சிதபாதக, க்ஷமன்வதேவதேவேச, புத்ராக்னீர்த்திஞ்சதேஹிமே, ஸ்ரீ கஜவக்த்ராயநம, ப்ரார்த்தனம் ஸமர்ப்பயாமி" என்று பிரார்த்தித்து, தேவாரத் திருமுறைகளால் தோத்திரம்பண்ணி,

சித்திரான்னம் முதலிய அன்னவகைகளும், பற்பல பலகாரவகைகளும், கனிவர்க்கங்களும், நீர்மோர் முதலிய பானவர்க்கங்களும், அடைக்காய் முதலியவும் அமைத்து முன்சொன்ன மந்திரபூர்வமாக நிவேதனம்செய்து நீர்விளவி, தூபதீபங்கொடுத்து, வலம்வந்து திருவடிகளை வணங்கி, சோடசதானங்களை வழங்கி கணேசமூர்த்தியை இருதயகமலத்தில் இருத்தி விநாயகசதுர்த்தி விரதத்தைப் பூர்த்தி செய்தல்வேண்டும்.

மேற்கூறியவண்ணம் செய்துமுடிக்க இயலாதவர்கள் குறித்த. தினத்திலே முற்கூறியபடி மிருத்திகையினுல் (மண்) விநாயகமூர்த்தியின் திருவுருவம் செய்து தம்மாலியன்ற வரை பூஜை நைவேத்தியாதிகளைச் செய்து சித்தசுத்தராயிருந்து விநாயகமூர்த்தியின் திருவடிகளைச் சிந்தித்திருத்தல் வேண்டும்.

அவ்விதம் செய்தவர் மும்மலங்களையுங் கடந்து விநாயகப் பெருமானோடிரண்றக் கலந்து வாழ்வார்.

ஓம்! தத்!! ஸத்!!!

இஃது, சைவத்திற் கண்டது.

---

வைய முய்யவே—நையு மன்பினீர்
சைவம் பரவவே—சேய்து வாழ்மினே.

# செங்குந்தர் கிளர்ச்சி.

## வித்தியாதானம்

புண்ணிய பூமியாகிய நம் பரத கண்டத்திலுள்ள மக்கள் யாவரும் இயற்கையிலேயே தெய்வ பக்தியுள்ளவர்கள் என்பது நம்தேசத்தில் கட்டப்பெற்றுள்ள அளவிறந்த கோயில்களையும், நம் முன்னோர் இயற்றி வைத்துள்ள நூல்களையும், அவர்கள் சரித்திரங்களையும் கவனிப்போர்க்கு நன்கு விளங்காமற் போகாது. கடவுளிடத்து அன்பு செலுத்துதற்கு இன்றியமையாது முன்னர் வேண்டற்பாலது உயிர்களிடத்துச் செலுத்தும் அன்பாம். இக்கருத்துக்கொண்டே அருணகிரிநாத சுவாமிகள்,

"கெடுவாய்மனனே கதிகேள் கரவா
திடுவாய்வடிவேலிறைதாள்நினைவாய்
சுடுவாய்நெடுவேதனை தூள்படவே
விடுவாய்விடுவாய்வினை யாவையுமே."

என உயிர்களிடத்துச் செலுத்தவேண்டிய அன்பை முதற்கண் கூறிப் பின்னர் இறைவனிடத்துச் செலுத்தவேண்டிய அன்பைக் கூறியருளினார்.

"அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு"

எனப் பெரியார் பணித்தவாறு உயிர்கள் மாட்டு எவ்வளவுக்கெவ்வளவு அன்பு செலுத்தப்படுகிறதோ அவ்வளவுக்கவ்வளவு அன்பு செலுத்துவோர், தமது சௌகரியங்களைக் குறைத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது.

அஃதாவது இப்பொருள் எனதே இதையானே அநுபவித்தற்குரியன் என்னும் பற்றின் வலிமையானது குன்றுகிறது. இத்தகையத் தியாகிகளே,

"தங்குறைதீர்வுள்ளார் தளர்ந்து பிறர்க்குறூஉம்
வெங்குறைதீர்க்கிற் பார்" ஆகிய விழுமியோராவார்,

இவரே ஐம்பொறிகளை அடக்கியோரும் அடக்கமுயல்வோருமாவர். உடல்,பொருள், ஆவிகளையும் பிறர் நன்மையின்பொருட்டு



விருப்பத்தோடு உதவிய சிபிச்சவர்த்தி, ததீசி முனிவர்போன்ற பெரியோர் நம்தேசத்தில் பலர் இருந்தனர் என்பது சரித்திர மூலமாக நன்கு விளங்குகிறது. அன்னார் வாழ்க்கையின் பயனாகத்தான் நாம் இன்று எண்ணிறந்த தரும சத்திரங்கள், மடங்கள் முதலியவற்றை ஆங்காங்கு காண்கின்றோம்.

இப்பெரு நோக்கமுடையார் இன்றும் நம்தேசத்தில் பலர் இருக்கின்றனர் ஆதலின், அன்னார் கவனிக்கவேண்டிய தொன்றுண்டு. அஃதாவது அவர் செலவிடும் பொருள் நல்வழியில் உபயோகப்படும்படியாகவும், அதனால், எவ்வளவு நன்மை பிறர்க்குச் செய்யக்கூடுமோ அவ்வளவையும் செய்துகொள்ளக்கூடிய மாதிரியில் அதைச் செலவிடும்படியாகவும் கவனித்தல் வேண்டும். இல்லையாயின் தூண்டிற்காரனுக்குக் காலணா உதவியவன் பெற்றதாகச் சொல்லப்படுவதுபோன்ற பெரும்பாவத்தையும் பழியையும் அடைய நேரிடும். புண்ணிய க்ஷேத்திரத்திற்குச் சென்ற ஒருவன் நான் இறைவனுக்குச் செலவிடுவதாகச் சொல்லிக்கொண்ட பணத்தைச் செலவு செய்துவிடுகிறேன். நீ கொடுத்த வரையில் கொடு, பாவபுண்ணியம் உன்னோடு, எனக்கடைக்காரனிடம் சொல்லுவது போன்ற செய்கைகள் அறிவாளிகளுக்கு அடுத்ததன்று. நம்நாட்டில் பெரும்பாலும் பிறர்க்குதவிபுரிய விரும்பியவர், கோயில், அறக்கூழ்ச்சாலை, சாதுமடம் முதலிய அமைத்து, அவையும் பெரும்பாலும் ஓரினத்தவர்க்கே பயன்படுமாறு வைப்பது வழக்கமாக இருந்து வருகிறது. ஆயினும்,

"பழையனகழிதலும் புதியன புகுதலும்
வழுவல கால வமைதியானே."

என்னும், பழையமொழிப்படி அவற்றைத் தற்கால அமைப்புக் கிணங்கக் கூடியவரையில் மாற்றுவதன்றி இனிப் பொது நன்மைக்குதவ முன்வருவோரை, இன்றியமையாதனவும், பெரும் பயன் தரத்தக்கனவுமாகிய துறைகளில் தம்பொருளைச் செலவிடுமாறு ஊக்குவது நமது கடமையாகும்.

இனி, ஆலயம் அமைத்தல் பொதுஜன நன்மைக்கு வேண்டப்படுவதாயினும், ஆலயம் இன்னது, ஆங்கு இறைவனை வணங்குவதிவ்வாறு, இறைவனுக்கும் நமக்கும் உள்ள சம்பந்தம் இன்னது, அவரை நாம் ஏன் வணங்கவேண்டும், அதனால் வரும் பயன்

யாது, நமது மதக்கொள்கைகள் இன்னவை என்பவற்றைப்பற்றி ஒரு சிறிதும் அறியாது ஆலயத்துட்சென்று விநாயக மூர்த்தியின் சந்நிதியில் நின்று,

"கானமயிலாடக் கண்டிருந்த வான்கோழி
தானுமதுவாகப் பாவித்துத்—தானுந்தன்
பொல்லாச்சிறகை விரித்தாடினாற் போலுமே
கல்லாதான் கற்றகவி."

என்றும், சிவபெருமான் சந்நிதியடைந்து.

"சித்திதரும் புத்திதரும் செந்திருவைச் சேர்விக்கும்
பத்திதரு மெய்ஞ்ஞானம் பாலிக்கும்—கொத்தி
அரிமுகனைக் காய்ந்த அருணேசர் தந்த
கரிமுகனைக் கைதொழுதக் கால்"

என்றும், முருகப்பெருமான் திருமுன்னர்ப்போய்,

"கவையாகிக் கொம்பாகிக் காட்டகத்தே நிற்கும்
அவையல்ல நல்லமரங்கள்—சபைநடுவே
நீட்டோலை வாசியாநின்றான் குறிப்பறிய
மாட்டாதவனன் மரம்."

என்றும், தோத்திரஞ்சொல்லி ஆலய வழிபாடு செய்யும் தகுதி வாய்ந்த சிவனடியாரையே நம் நாட்டில் பெரும்பாலும் காண்கிறோம். இத்தகைய நிலைமைக்குக் காரணம் கல்லாமையன்றோ. கல்வி கேள்விகளிற்றேர்ந்த அறிவுடையோரே, அறிவு சொரூபமாய் விளங்கும் இறைவனை வழிபடும் தகுதி வாய்ந்தோர் என்னும் அபிப்பிராயத்தைப் பெரியோர்,

"கற்றவர்கள் உண்ணும் கனியே"

என்றும்,

"கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள்தொழாஅர் எனின்."

என்றும், திருவாய் மலர்ந்தருளியுள்ளது கவனிக்கற்பாற்று.

ஆகவே, கல்வி காரணமாகவும், அக்கல்வியின் பின் தோன்றுவதாய ஆலயவழிபாடு காரியமாகவுமிருத்தலால், ஆலயத்தினும், கல்வி முக்கியமானதெனக் கருதுதல் வேண்டும்.



இனி, அன்னதானத்தா லுண்டாகும் பயனைக்குறித்து ஆராய்வாம். அன்னதானம் எல்லாத் தானங்களினும் சிறந்ததெனக் கருதிப்பல அன்பர்கள் அறக்கூழ்ச்சாலை முதலியவை நிறுவுதற்பொருட்டுப் பெரும்பொருள் செலவிடுகின்றனர். அன்னதானம் மிகச் சிறந்ததென அறிவாளிகளால் கொள்ளப்பட்டதாயினும், வித்தியாதானம் அதனினும் பதின்மடங்கு மேம்பட்டதாகும் என்பதைக் காட்டிலும் இழிந்தது பிறிதொன்றில்லை என்றும், அது ஒரு தொழிலாகாதென்றும் கருதியன்றோ நாயனார்,

"இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக உலகியற்றி யான்."

எனப் பணித்தருளினார்,

ஆகையால், அன்னதானம் பெரும்பாலும் சோம்பித் திரிவோர்க்குத் துணையாயிருந்து அவர்கள் இரத்தலையே தம் பரம்பரைத் தொழிலாகக் கொள்ளுமாறுச் செய்வதன்றி அவர் தம் சுயமரியாதையை வேரோடு பிடுங்கி எறிகிறது. இவ்வுண்மை சிறிதனுபவமுள்ளோர்க்கும், நன்கு விளங்கும். உதாரணம் காட்டப் புகின் விரியும்.

"உடையார்முன் இல்லார்போல் ஏக்கற்றுங் கற்றார்
கடையரே கல்லா தவர்."

என்னும், மறை மொழிப்படி வித்தியாதானஞ் செய்வோர் அத்தானமேற்றோரது பசியையன்றி அவரைச்சார்ந்தோரது பசியையும், என்றும் போக்குவதன்றிச் சுயமரியாதை யழியாதவரும், தாழ்ந்த குடிப்பிறப்பினரேனும், உயர்குடிப்பிறப்பினராலும், மதிக்கப்படுவோரும், அவையத்து முந்தியிருக்கும் தகுதியுடையோருமாகிய சான்றோர்த் தொகையைப் பெருக்குகின்றனர். அவ்வாறன்றி அன்னதானஞ் செய்வோர், இரப்போர்க்கு அப்போதுண்டாய பசியை மாத்திரம் போக்கி சுயமரியாதையற்றக் கயவரது கூட்டத்தைப் பெரும்பாலும் பெருக்குகிறார்கள். அப்போதுண்டாகும் பசியைமாத்திரம் போக்கவல்ல அன்னதானத்தின் பலனைக்காட்டிலும்,

"ஒருமையிற் றான்கற்ற கல்வி யொருவற்கு
எழுமையும் ஏமாப்புடைத்து"

என்றபடி, எழு பிறப்பினும் தொடர்ந்து சென்று நன்மை செய்ய வல்லதாய வித்தியாதானத்தின் பலன் மேம்பட்டதென்பது யாவரும் ஒப்புக்கொள்ளக்கூடிய தொன்றாம்.

"மன்னனு மாசறக்கற்றோனுஞ் சீர்தூக்கின்
மன்னனிற் கற்றோன் சிறப்புடையன்—மன்னற்குத்
தன்றேசமல்லாற் சிறப்பில்லைக் கற்றோர்க்குச்
சென்றவிடமெல்லாஞ் சிறப்பு"

என்னும், முதியோர் மொழியானும் கல்வியானும் சிறப்பு விளங்கா நிற்கும். இதற்குதாரணம் கல்விக்களஞ்சியமாகிய "ரபேந்திர நாத் டாகோர்" என்னும் பெரியாரேயாவர் பொய்யும் பிறர்க்கு நன்மை பயப்பதாயின் மெய்யெனவே, கருதப்படும் என்னும் கருத்தமைந்த,

"பொய்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கு மெனின்"

என்னும், திருக்குறளிலிருந்து, இரத்தலும் கல்வியின் பொருட்டாயின் அக்கல்வியாலுண்டாகும் நன்மை கருதி, அது ஈதலுக்குச் சமமான தெனவே யூகித்தறியக் கிடக்கிறது. அன்றியும் பசிநோய் தீர்தற்பொருட்டு இரக்கும் ஒருவானுக்கு உண்டாகும் இழிவையும், அறிவின்மை தீர்தற்பொருட்டு ஆசானிடம் கல்வியை இரந்து நிற்கும் மற்றொருவனுக்கும் உண்டாகும் மேன்மையையும் சிறிது சிந்திப்போர்க்கு இவ்விருதானங்களின் ஏற்றத் தாழ்வு வெள்ளிடை மலைபோல் விளங்கும்.

பலவாற்றானும் சிறந்ததாய வித்தியாதானத்தைக் குறித்து நம்முன்னோர். கவனித்ததாகத் தோன்றவில்லையே அதற்குக் காரணம் யாதோவெனில் கூறுதும். பண்டைக்காலத்தில் ஆரம்பக் கல்வி தெருப்பள்ளிகள் மூலமாகவும், உயர்தரக்கல்வி பொருளாசையற்றத் துறவிகளாலும் மாணவரிடத்துப்பொருளுதவி எதிர்பாராத பெரியோர்களாலும் கற்பிக்கப்பட்டு வந்தன. மாணாக்கன் ஆசிரியனிடத்தில் கற்றான பிறகு, தன்னால் கூடியதை குருகாணிக்கையாகக் கொடுப்பதே யன்றி முற்காலத்தில் தற்காலத்தைப்போல் கல்வியின் பொருட்டு மிகுந்த பொருட் செலவு அப்போதைக்கப்போது செய்ய வேண்டிய அவசிய மில்லாமலு மிருந்தது. பொருட் செல விட்டு நிறுவப்பெற்றக் கலாசாலைகளும் சில இருந்



தன. மதுரை, காஞ்சி, காசி முதலிய வித்யா பீடங்களிலுள்ள பண்டிதர்கள் அரசாங்கத்தால் மானியம் முதலியவை கொடுக்கப் பெற்றும் கல்விபயிற்றி வந்தனர் என்றும், சரித்திர ஆராய்ச்சியால் அறிகிறோம்.

ஆயினும், மத்திய காலத்தில் சில சுப நலவாதிகளின் சூட்சியால் அவை அடியோடு பாராமரிக்கப்பட்டு நிலை குலைந்து போயின பொது ஜனங்கள் கல்லாத அறிவீனர்களா யிருந்தாலன்றித் தங்களுக்குச் செல்வாக்கிராது என உணர்ந்த ஓரினத்தவர் தங்களுக்கு இயற்கையாக உள்ள தந்திரத்தால் தம்மினத்தவர்க்கே பூதானம், கோதானம், அன்னதான மாதிய செய்து பின் அதுவே சிறந்த புண்ணியத்தைப் பயக்குமென எண்ணிறந்த சாத்திரங்களை வரைந்து வைத்துப் பொது நன்மைக்குதவ முன் வராவாது மதியை மயக்கிவைத்தனர்.

நாம் தற்காலம் இறந்த காலத்திற்கிரங்காது எதிர் காலத்தைப்பற்றிக் கவனிப்பதே நலமாகும். பொது ஜன நன்மையின் பொருட்டுச்செய்யும் முயற்சிகள் யாவற்றுள்ளும் கல்வியின் பொருட்டுச் செய்வதே தலையாய தென உணர்ந்து அத்துறையில் முனைந்து உழைப்போமாயின் நம் நாடு தானாகவே மற்றெல்லாத் துறைகளிலும் முன்னேற்றம் அடையும் என்பது திண்ணம்.

ஆகையால், நாம் ஒவ்வொருவரும் கூடிய வரையில் மேன் மேலும் கற்க விரும்பும் ஏழைமாணவர்களுக்கு உதவி செய்வது நமது தலைக்கடமையாகக் கருதல் வேண்டும்.

"இல்வாழ்வா னென்பான் இயல்புடைய மூவர்க்கும்
நல்லாற்றி னின்ற துணை"

என்றும், மறை மொழிப்படிப் பொருட்செலவிட்டுக் கற்கச் சக்தியற்ற ஏழைமாணவர்களுக்கு உணவு, இடம், உபகாரச்சம்பளம், புத்தகம் முதலியவை அளித்து ஆதரிக்கவேண்டும்.

சந்ததி யில்லாதவர்களும் பிறர்க்குதவும் தரும சிந்தையுடையவர்களும், பக்தியுள்ளவர்களும், இனியாவது அநாவசியமாகப் பணத்தை ஆயிரக்கணக்காகத் திருவிழா முதலியவற்றிற்கும், உழைத்து உண்ணச் சோம்பித்திரிவோரை உற்சாகப் படுத்தச் செய்யும் சதாவர்த்தி முதலியவற்றிற்கும், இவை போன்ற

மற்றவற்றிற்கும் உதவுதலை நிறுத்தி என்றும் நீங்காத புகழ் பெற்றுள்ள பச்சையப்ப முதலியாரைப் போல் கல்விக்கு உதவி புகழுடம்பு பெற்று வாழுமாறு ஸ்ரீ முருகப்பெருமான் திருவருள் பாலிப்பானாக.

மா. அ. கனகசபை முதலியார்.

---

# தென்னிந்திய செங்குந்த மகாஜனசங்க

## நிர்வாக சபைக் கூட்டம்.

1927-ஆம் வருடம் ஜுலைமீ 31உ மாலை 4-மணிக்குச் சென்னை அரண்மனைக்காரன் தெருவு 31-வது எண்ணுள்ள சங்கவில் நிருவாக சபைக்கூட்டம் திரு. ம. அ. கனகசபை முதலியார் தலைமையின் கீழ் நடைபெற்றது. கூட்டத்தில் கீழ்க்கண்ட விஷயங்கள் நிறைவேற்றப்பட்டன.

(1) இந்தச் சங்கத்தின் பெயரை உடையனவாய் இதனைத் தலைமைச் சங்கமாக உடையனவாய் உள்ள கிளைச்சங்கங்களை யாண்டும் நிறவுதல்.

(2) சென்னை, மயிலாப்பூர், திருவல்லிக்கேணி, புதுப்பாக்கம் முதலிய இடங்களில் கிளைச்சங்கங்கள் ஸ்தாபிக்க வேண்டுமென்று தீர்மானிக்கப் பெற்றது.

(3) சட்டதிட்டங்களை நிர்ணயிக்க.

(1) திரு. ம. அ. கனகசபை முதலியார் திரு. மா. பா. கந்தசாமி முதலியார் பி. ஏ; பி. இ; திரு. ம. சண்முகசுந்தர முதலியார் எம். ஏ; எல். டி; ஆகிய மூவர் கொண்ட ஒரு சப் கமிட்டி ஏற்படுத்தப்பட்டது.

(4) நிருவாக சபை அங்கத்தினரிடமிருந்து சங்கத்திய சந்தா தொகையை வசூலிக்கவேண்டியது தென்றும்,

(5) பிரசாரம்

(a) குடியேற்றம், பள்ளிக்கொண்டா, வெட்டுவாணம், முதலிய இடங்களில் திரு. D. N. தீர்த்தகிரி முதலியார், A. K. கணபதி முதலியார், திருக்கழிக்குன்றம் சாமிநாத தேசிகர் முதலியவர்களும்,



(b) காஞ்சீபுரத்தில் சென்ற நிர்வாக சபை கூட்டத்தில் நியமிக்கப்பட்டவர்களும் பிரசாரம் செய்தல் வேண்டுமென்றும், தீர்மானிக்கப் பெற்றன.

(6) ஸ்ரீலஸ்ரீ காஞ்சி நாகலிங்கமுனிவருக்குப்பதிலாகத்தென்னிந்திய செங்குந்த மகாஜனசங்க அமைச்சருள் ஒருவரும், சென்னை முத்தியாலுபேட்டை உயர்தர கலாசாலைத் தலைமை ஆங்கிலப்போதகாசிரியரும் ஆகிய திரு. ம. சண்முகசுந்தர முதலியார் எம். ஏ; எல். டி; அவர்களைச் செங்குந்த மித்திரன் பத்திராதிபராக நியமித்திருப்பது இக்கூட்டத்தில் அங்கீகரிக்கப் பெற்றது.

(7) உபகாரச் சம்பளம்.

(a) பல இடங்களிலும் விரவித்தால் வேண்டுமென்று முடிவு செய்யப்பெற்றது.

(b) சங்கத்திற்கு இப்பொழுது மூலதனமின்மையாலும், சங்கத்தாருக்கு மாணவர்களுக்கு உபகாரச் சம்பளம் கொடுக்க விருப்பம் இருத்தலினாலும், நிர்வாக சபை அங்கத்தினருட்சிலரும், இன்னுஞ் சில அபிமானமுள்ள சீமான்களும் கீழ்க்கண்டபடி உபகாரம் செய்வதாக ஒப்புக் கொண்டார்கள்.

1. T. N. சபாபதி முதலியார் அவர்கள் மூன்று மாணவர்களுக்கும்,
2. மா. அ. கனகசபை முதலியார் அவர்கள் ஒரு உயர்தரக் கலாசாலை மாணவனுக்கும்,
3. ம. சண்முகசுந்தர முதலியார் அவர்கள் ஒரு கல்லூரி மாணவனுக்கும்,
4. மா. பா. கந்தசாமி முதலியார் அவர்கள் ஒரு கல்லூரி மாணவனுக்கும்,
5. தி. ச. சுவாமிநாத தேசிகர் அவர்கள் உயர்தரக்கலாசாலை மாணவனுக்கும்,
6. குடியேற்றம் A. K. கணபதி முதலியார் அவர்கள் உயர்தரக்கலாசாலை மாணவனுக்கும்,
7. T. M. இராமலிங்க முதலியார் அவர்கள் உயர்தரக் கலாசாலை மாணவனுக்கும் உபகாரச் சம்பளங்கொடுப்பதாக ஒத்துக்கொண்டார்கள்.

8. சட்டதிட்டங்கள் வரையறுத்தான பிறகு சங்கத்தைச் சென்னை பழையக்காட்டுக் கம்பெனி உண்டியல் பணத்தைக் கொண்டு பதிவுசெய்ய வேண்டுமெனத் தீர்மானிக்கப் பெற்றது.

---

# செங்குந்த மித்திரன்

## பஞ்சாங்கம்,

கா. ச. ஸ்வாமிநாத தேசிகரால் கணிக்கப்பட்டது.

பிரபவஹூ ஆவணிமீ, புரட்டாசிமீ, 1927 செப்டம்பர்மீ

தக்ஷிணாயனம், வருஷருது, கலி, 5029, பசலி, 1338, சாலி - 1849 - பிரபவ—1—

| செப்டம்பர். | தமிழ். | வாரம். | திதி. | நக்ஷத்திரம். | யோகம். | விரதாதிகள், நாயன்மார்கள் திருநக்ஷத்திரம் முதலியவைகள் |
|---|---|---|---|---|---|---|
| 1 | 16 | வியாழன் | பஞ், 42-10 | | அமி, 60 | விவாஹம், விதைவிதைக்க, கோடி மாடுயாத்திரை செய்ய, |
| 2 | 17 | வெள்ளி | சஷ், 47-5 | சுவாதி, 60 | சித்த, 60 | மாடுவாங்க |
| 3 | 18 | சனி | சப், 54-10 | சுவா, 4-37 | சித்த, 60 | குலச்சிறை நாயனார் |
| 4 | 19 | ஞாயிறு | அஷ், 56-3 | விசா, 11-52 | மர, 60 | காலை ஆபரணம் பூண |
| 5 | 20 | திங்கள் | நவ, 59-10 | அநு, 18-0 | சித, 60 | கிணறுவெட்ட, குங்கிலியக்கலயர் |
| 6 | ஆவணிமீ 21 | செவ்வாய் | தச, 59-1 | கேட், 22-46 | அ, 26, சி, 38 | மதுரையில் பிட்டுதிருவிழா |
| 7 | 22 | புதன் | ஏகா, 57-0 | மூல, 25-39 | அ, 60 | ஏகாதசிவிரதம், ம. மண்சுமந்த திருக்கோலம், |
| 8 | 23 | வியாழன் | துவா, 52-40 | பூர, 26-24 | சி, 60 | விறது விற்றல் (ஒட்டக்கூத்தர் திருநக்ஷத்திரம்.) |
| 9 | 24 | வெள்ளி | திர, 46-57 | உத, 24-59 | ம, 21-சி-44 | பிரதோஷம் |
| 10 | 25 | சனி | சது, 39-30 | திரு, 21-43 | சி, 16-அ-45 | மாங்கல்லியஞ்செய்ய மருந்துண்ண |
| 11 | சிம்மமீ 26 | ஞாயிறு | ○; 30-45 | அவி, 16-45 | சி, 60 | காலை தொட்டிலில் குழந்தையைப்போட |
| 12 | 27 | திங்கள் | பிர, 22-3 | சத, 10-40 [42 | ம, 3, சி, 44 | மாளயம் ஆரம்பம், |
| 13 | 28 | செவ்வாய் | துதி, 12-50 | பூர, 3 43 உத, 56- | சி, 60 | யாவத் காரியங்களும் செய்யலாம், |
| 14 | 29 | புதன் | திரி, 3-56 சது, 60 | ரே, 49-36 | ம, 43, சி, 15 | மருந்துண்ண மாடுவாங்க |
| செப்டம்பர்மீ 15 | 30 | வியாழன் | பஞ், 49-3 | அஸ், 43-16 | சி, 37, ம, 55 | அடுப்புவைக்க, கிருத்திகை, |
| 16 | 31 | வெள்ளி | சஷ், 43-12 | பர, 37-56 | சி, 33, ம-56 | கடன்நீக்க |
| 17 | 1 | சனி | சப், 39-4 | கி*, 33-56 | அ, 31, சி, 26 | விதைவிதைக்க |
| 18 | 2 | ஞாயிறு | அஷ், 36-27 | ரோக, 31-26 | சி, 60 | மருந்துண்ண |
| 19 | 3 | திங்கள் | நவமி, 35-25 | மிரு, 30-26 | சி, 13-அ-9 | குழந்தையைத் தொட்டிலில்போட |
| 20 | புரட்டாசிமீ 4 | செவ்வாய் | தச, 35-58 | திரு, 31-8 | சி, 60 | மாடுவாங்க, தானியம் வாங்க |
| 21 | 5 | புதன் | ஏகா, 37-46 | புற, 33-3 | சி, 60 | மருந்துண்ணல் |
| 22 | 6 | வியாழன் | துவ, 40-35 | பூச, 36-23 | சி, 40-அ 43 | நவக்கிரக சாந்திசெய்ய |
| 23 | 7 | வெள்ளி | திர, 44-24 | ஆயி, 40-42 | ம, 46-சி-55 | பிரதோஷம் |
| 24 | 8 | சனி | சது, 48-59 | மகம், 46-15 | சி, 51-ம-55 | அருணந்தி சிவாசாரியர், |
| 25 | 9 | ஞாயிறு | அ●, 54-20 | பூர, 51-57 | அ, 60 | மாளய அமாவாசை |
| 26 | 10 | திங்கள் | பிர, 59-56 | உத, 58-30 | சி, 60 | நவராத்ரி ஆரம்பம், |
| 27 | கன்னியாமீ 11 | செவ்வாய் | து. 60 | அஸ், 60 | சி, 60 | குளம் கிணறுவெட்ட |
| 28 | 12 | புதன் | து, 6-10 | சித், 13-14 | சி, 60 | தானியம் செலவிட |
| 29 | 13 | வியாழன் | திரி, 12-42 | சுவா, 20-56 | அ, 21-சி-54 | வாஸ்து சாந்திசெய்ய |
| 30 | 14 | வெள்ளி | சது, 18-56 | விசா, 28-30 | சி, 60 | மாடுவாங்க |

# கடிதங்கள்

## சிக்கல், பொருள்வைத்த சேரி.

### செங்குந்த மகாஜன சபை.

இதனுதரவில் பிரபவ வருஷம் ஆடி மாதம் 22-ந்தேதி 6-8-27 சனிக்கிழமை மாலை 5½ மணிக்குத் தண்டபாணி கோவில் கீழண்டை வீதியில் ஓர் பெருங்கூட்டம் கூடிற்று. சுமார் 200 ஜனங்கள் வரை குழுமியிருந்தனர். திரு. நா. நாகப்பமுதலியார் அவர்களால் தேசியகீதம் கடவுள் வாழ்த்துக் கூறியபின் சிக்கல் உயர்திரு. சொ. ச. கந்தசாமி முதலியார் அவர்கள் தலைமை வகித்தார்கள். தலைவரவர்கள் முன்னுரையின் பின் நாகை திரு. காளியப்பதேவர், T. P. ஆறுமுகம் முதலியார் அவர்கள், சாமுவேல் முதலியார் அவர்கள், நா. நாகப்ப முதலியாரவர்கள் பேசிய பின் பட்டுக்கோட்டை சுயமரியாதை வீரர் ஸ்ரீமான் அளகிரிசாமி நாயுடு அவர்கள் பெருத்த கரகோஷத்தினிடையே எழுந்து தற்கால நிலைமையும் நமது கடமையும் என்பதைப் பற்றி சுமார் 2½ மணி நேரம்வரை அரிய சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். தலைவரவர்கள் முடிவுரையின் பின் சந்தண தாம்பூலம் வழங்கப்பெற்று இரவு 9½ மணிக்குக் கூட்டம் இனிது கலைந்ததென காரியதரிசி அறிவிக்கிறார்.

### மாப்பிள்ளைக்குப்பம்

### செங்குந்தர் மஹாஜனசபை.

மாப்பிள்ளைக்குப்பம் ஸ்ரீ சந்தவெளி மாரியம்மன் கோவில் சந்நிதியில் 28-6-27 அமாவாசை தினம் மாலை 6-மணிக்கு ஷெடி சபையின் 2-வது கூட்டம் நடைபெற்றது மேற்படி சபையில் மாப்பிள்ளைக்குப்பம் மகா ஜனங்களும் தென்னஞ்சார், கீழ்க்குடி கிராமங்களிலிருந்தும் சுமார் 50, 60 பேர்கள் விஜயம் செய்திருந்தார்கள்.

### சபையின் அமைப்பு

சபைத்தலைவர்.—திருவாளர் K. L. இராமலிங்க முதலியார் அவர்கள், உபத்தலைவர். — திருவாளர் M. A. கோவிந்தசாமி முதலியார் அவர்கள், காரியதரிசி.—திருவாளர் S. சுந்தர முதலியார் அவர்கள், பொக்கிஷதார்.—திருவாளர் S. சொக்கலிங்க முதலியார் அவர்கள்,



### சபையில் நடைபெற்ற விஷயங்கள்.

திருமருகல் Board School Headmaster திருவாளர் S, சுப்பிரமணிய முதலியாரவர்களால் கடவுள் வணக்கம் செய்த பிறகு ஆண், பெண், இருபாலரும் கல்விகற்க வேண்டுமென்கிற அவசியத்தைப்பற்றி எல்லோரும் நன்குணரும்படி வெகு தெளிவாக நீண்டதோர் உபந்நியாசம் செய்தார்கள், பிறகு அடியிற்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

பிரதி அமாவாசைதோறும் சபை கூடுவதாய்த் தீர்மானித்திருந்ததை மாற்றிப் பிரதி இங்கிலீஷ் மாதம் கடைசி ஞாயிற்றுக்கிழமை மாலை 3-மணிக்குச் சபைக் கூடவேண்டுமென்று K. L. இராமலிங்க முதலியாரவர்களால் பிரேரேபணை செய்யப்பட்டு S. சொக்கலிங்க முதலியாரவர்களால் ஆமோதிக்கப்பட்டுச் சபையில் எல்லோர்களாலும் ஏகமனதுடன் தீர்மானிக்கப்பட்டது.

2. கல்யாணங்களில் மோதிரப்பணம் போடுவது என்பதை நிறுத்திவிட வேண்டுமென்று திருமருகல் போர்டு ஸ்கூல் எட் மாஸ்டர் எஸ்; சுப்பிரமணிய முதலியாரவர்களால் பிரேரேபணை செய்யப்பட்டு மாப்பிள்ளைக்குப்பம் M. A. கோவிந்தசாமி முதலியாரவர்களால் ஆமோதிக்கப்பட்டுச் சபையில் எல்லோராலும் ஏகமனதுடன் தீர்மானிக்கப்பட்டது.

3. நன்மை துன்மை நடக்கும் வீடுகளில் இதர விவகாரங்களைப் பேசக்கூடாதென்று மாப்பிள்ளைக்குப்பம் S. கோவிந்தசாமி முதலியாரவர்களால் பிரேரேபிக்கப்பட்டுக் கீழக்குடி T. L, நாகமுத்து முதலியாரவர்களால் ஆமோதிக்கப்பட்டுச் சபையில் எல்லோர்களாலும் ஏகமனதுடன் தீர்மானிக்கப்பட்டது,

பிறகு வந்தனங்கூறி இரவு 9 மணிக்குச் சபைக்கூட்டம் இனிது நிறைவேறியது:

S. Sundara Mudaliar,
காரியதரிசி
செங்குந்தர் மஹாஜன சபை
மாப்பிள்ளைகுப்பம்.

## உபந்நியாசத்தால் உண்டாகிய ஊதியம்.

உலகானுபவமும், கல்வியறிவும், நிரம்பிய ஆன்றோர்கள் தம்மால் இயற்கையாய் அமைந்துள்ள பெருங்கருணையால், பலவகை

யாலும் நல்லொழுக்கங்களைப் போதித்து, அவ்வொழுக்க வாயி லாக அறிவு என்னும் சுடரைக் கொளுத்தி அவ்வறிவின் ஒளி யால்; உண்மைப்பொருளாகிய கடவுள் ஒருவர் உண்டு என்றும், ஆஸ்திகபுத்தியை விளங்கச்செய்வர் என்பது, கூர்த்து நோக்கு வோர்க்கு விளங்கியதொன்றும்.

அவ்வகைகள் பலவாயிருப்பினும் குலாசாரம், சமையாசாரம் என்னும் இருவகையில் அடங்கும். குலாசாரத்திலும், சமையா சாரத்திலும் தவறு நேராமல் எச்சரிக்கையா யிருப்பவர்கள் அவ் வாசாரத்தின் பயனை தருமமும், தெய்வ அருளும் முறையே கைவரப் பெற்றவர் ஆவர். எனவே, அத்தகைய நன்மைகள் பல புரிந்து நம்முடைய நாட்டைப் பண்டையகாலம் தொடங்கி தமது சொற்பொழிவாகிய மழையால் மனிதரென்னும் பயிர்வாடாமல் பாதுகாத்தவரும், பாதுகாக்கின்றவரும், பாதுகாப்பவரும், உண் மைத் துறவினராகிய முனிவரேயாவர்.

தற்காலத்துள்ள அம்முனிவரில் ஒருவராகிய நம் காஞ்சிநாக லிங்கமுனிவர் அவர்கள், எங்கள் பாக்கியத்தால் திருப்பத்தூருக்கு விஜயம்செய்து நாளது ஆடி மாதம் 13-ந் தேதி ஸ்ரீராமநிலயத் தில் நம்குல முன்னேற்றம் என்ற உபந்நியாசம் புரிந்தனர். மேற்குறித்த உபந்நியாசத்திற்குச் சுற்று கிராமவாசிகளாகிய செங்குந்தரும் வந்திருந்து சிரத்தையோடு கேட்டனர். அதன் பயனாக மேற்படி திருப்பத்தூர் தாலுக்கா செலந்தம்பள்ளி கிரா மத்தில் நாளது ஆடி மாதம் 21-ந் தேதி வெள்ளிக்கிழமையில் செய்த கிராம தேவதையாகிய மாரியம்மன் திருவிழாவில், கொலைப்பலி செய்யும் தாமதாம்சமான பூசையை அறவேயொழித்து சாத்வீகாம்சமான தேவபூசையையே செய்தார்கள்.

பாட்டுக்குத் தலைகொடுத்த பண்டையோர் சரிதம் கேட்டு, ஆட்டுக்கும் கோழிக்கும் தலைகொடுத்துக் காத்தது செலந்தம் பள்ளி செங்குந்தருக்கு நூதன வழக்கமாகாது.

தக்கது இது, தகாதது இது. என்று விடயங்களை பலமுறை அமைதியுடன் எடுத்துரைக்கின் நம் குலத்தாருக்கு விளங்காமற் போகாது. ஒவ்வோரிடங்களிலும் கல்விச்செல்வமும், பொருட் செல்வமும் தாம் பெற்ற தற்கேற்ப இருவகைச் செல்வமும் பயன் படுமாறு நம் முனிவர்போல் சற்றுமுன் வருவாராகில் நம் குலத் தின் பழைய ஒழுக்கம வெகு விரைவில் பரவிப் பயன் தரும் என் பதில் ஐயம் இல்லை.

ஆ. கு. முருகைய முதலியார்,
தமிழ்ப்பண்டிதர்,

208437

80-வருஷ காலமாக உலக பிரசித்திபெற்ற

# அசல் ஷண்முகம் பட்டணம்பொடி

காரம் மணம் நிறம் குணம் வாடை உள்ளது.

அநேக மெடல்கள் நற்சாட்சி பத்திரங்கள் பெற்றது.

**ஷண்முகம் மூக்குத்தூள் கம்பெனி லிமிடெட்,**
**போஸ்ட் பாக்ஸ் 140, மதுரை.**

முதல் தரமானது

பார்சல் தபால் சார்ஜு

| பலம் | கிரயம் | தபால் சார்ஜு | பாக்கிங் | மொத்தம் |
|---|---|---|---|---|
| | ரூ. அ. பை. | ரூ. அ. பை. | ரூ. அ. பை. | ரூ. அ. பை. |
| 8 | 1 0 0 | 0 5 0 | 0 1 0 | 1 6 0 |
| 20 | 1 12 0 | 0 8 0 | 0 2 0 | 2 6 0 |
| 40 | 3 8 0 | 0 14 0 | 0 3 0 | 4 9 0 |

2-வது தரமானது வீ. 1-க்கு ரூ. 3. ஸ்பெஷல் சாக்கு வீ. 1-க்கு ரூ. 4.

பாக்கிங் சார்ஜும் தபால் கூலியும் பிரத்தியேகமானது

80 வருஷக் காலமாக சென்னையிலே சிறப்பு வாய்ந்து ஆயிரக்கணக்கான நற்சாக்ஷிப் பத்திரங்கள் பெற்று, தினசரி லெட்டர்களால் புகழ் பெற்று, அன்றாடம் நூற்றுக்கணக்கான பார்சல்களை சோல் ஏஜண்டுகள் தினந்தோறும் மெயிலில் பெற்று, ஜில்லா, தாலுக்கா, டவுன், கிராமம் முதல் குக்கிராமங்களிலும் கொண்டாடி, அசல் சேப்ரோல் வாடை, அசல் பசும் நெய் மணம், குளிர்ந்த குணம், இன்புறும் காரம், பவுன் நிறம் இவ்வைந்தும் ஒருங்கே அமையப்பெற்று, நமது ஏஜண்டுகளுக்கு நற்கியாதி தந்து வியாபாரிகளுக்கு நற்பெயரளித்து உபயோகப்படுத்திய கனவான்களுக்கு மனோபீஷ்டம் தந்து இந்தியாவில் ஏராளமாக செலவாகி வருவது எது? எங்கள் அசல் ஷண்முகம் பட்டணம் பொடியே. இனியேலாவது ஏமாந்து போகாமல் எங்கள் அசல் ஷண்முகம் பொடியை வாங்கி உபயோகப்படுத்தி இன்புறுங்கள்.

ஆங்கிலேயம் படிக்க விரும்பும் அன்பர்களே, நீங்கள்
ஏன் கவலைப்படுகிறீர்கள்!

40,000 ஜனங்களால் வாசித்து எங்கும் பிரபல்யமடைந்த எழுது

## ஆங்கில ஆசான்

தமிழ் எழுத்துக்களை வாசித்தால்
இங்கிலீஷ் பதங்கள் வெகு சுலபமாய்த் தெரிந்துகொள்ளலாம்.

இது 9-ம் பதிப்பு, 800 பக்கம் கொண்ட ஓர் பெரிய புத்தகம்.

உபாத்தியாயர் இல்லாமல் சுலபமாய் இங்கிலீஷ் கற்றுக்கொள்ள உதவும் புத்தகம் இதுதான். இது மாதர்களுக்கும், வியாபாரிகளுக்கும் தொழிலாளிகளுக்கும், மிகவும் முக்கியமானது. இப் பதிப்பில் மிகவும் சிரமப்பட்டு க-அணா முதல் 3,000 ரூபா வரைக்கும் மாதச்சம்பள கணக்கு போடப்பட்டிருக்கிறது. இதற்கு பின் வந்துள்ள போலி புத்தகங்களை வாங்கி ஏமாறாமல், இந்தப் படத்தில் காட்டியுள்ள லேடி டிரேட் மார்க் போட்டுள்ளதை பார்த்து வாங்குங்கள்.



முழு காலிகோ பைண்டு புத்தகம் 1-க்கு ரூ. 2.
வி. பி. தபால் சிலவு அணா 8.
அந்நிய நாட்டினர் முன் பணம் அனுப்பவேண்டும்.

தி. இராஜகோபால் முதலியார்,
302, தங்கசாலை வீதி, சென்னை.

---

முந்துங்கள்!] [உடனே சேருங்கள்!!

இரண்டாம் ஆண்டு தொடங்கிவிட்டது.

வித்வத்துவம்! அநுபவம்! ஆச்சரியம்! விநோதம்! ஆநந்தம்!
விசித்திரம்! அற்புதம் இவைகளெல்லாம் அடைவது எப்படி?

எமது

## ஆனந்தகுணபோதினி

அறிவை விளக்கி உற்சாகத்தைத் தர வல்லதான
உயர்ந்த நூதன செந்தமிழ் மாதப் பத்திரிகை.

பத்திராசிரியர்:—ஸ்ரீமான் எஸ். ஜி. இராமாநுஜலு நாயுடு அவர்கள்.

வருஷசந்தா: இந்தியா, பர்மா, சிலோன் முதலிய இடங்களுக்கு ரூ. 1 0
மாதிரிப்பிரதி இனம். வெளிநாடுகளுக்கு ரூ. 1 [illegible]
சென்ற அக்ஷயவருஷ பவுண்டு வால்யூம் ரூ. 1 [illegible]

அக்ஷயவருஷ சித்திரை மாதத்திலிருந்து வெளிவந்துகொண்டிருக்கிறது.

தி. இராஜகோபால் முதலியார்,
ஆனந்தகுணபோதினி ஆபீஸ், 302, தங்கசாலை வீதி, சென்னை.

செம்பாக்கம்

வே. இரத்தின ஸ்ரீ

கண்டாசலிபுரம்

பி. இராஜ மாணிக்க ஸ்ரீ

காரைக்கால்

சா. சோமசுந்தர ஸ்ரீ

சேலம் அம்மாப்பேட்டை

S. P. பொன்னுசாமி ஸ்ரீ

குடியேத்தம்

முத்தண்ணா, நாராயணசாமி ஸ்ரீ

தண்ணத்தூர் திருநாகேஸ்வாம்

வே. தருமலிங்க ஸ்ரீ
R. முனிசாமி ஸ்ரீ
தி. கா. கு. தெய்வசிகாமணி ஸ்ரீ

சென்னை

தி. மு. ந. முருகைய ஸ்ரீ

சைதாப்பேட்டை

S. முருகேச ஸ்ரீ

மைலாப்பூர்

A. M. அண்ணாமலை ஸ்ரீ

சத்தவாச்சாரி

T. N. சுப்பிரமணிய ஸ்ரீ
E. R. M. குப்புசாமி ஸ்ரீ

அரப்புக் கோட்டை

அ. கு. சி. குழந்தைவேலு ஸ்ரீ

சீர்காழி

தி. இராமசாமி ஸ்ரீ அண்டு சன்ஸ்
ச. தி. வீ. சிங்கார ஸ்ரீ
அ. ச. கோ. வ. தில்லை கோவிந்த ஸ்ரீ

மலாய்நாடு

A. அருணாசல முதலியார்

நூறம்பேடு

மு. செ. மாணிக்க ஸ்ரீ

செய்யூர்

இ. வன்மீகநாத ஸ்ரீ

மாறும்பதி

வேணுகோபால் ஸ்ரீ

காஞ்சிபுரம்

சு. விஸ்வநாத ஸ்ரீ

சோளிங்கபுரம்

பட்டணம் கோவிந்த ஸ்ரீ

தென்காசி

K. A. குத்தாலலிங்க ஸ்ரீ
A. K. சுப்பிரமணிய ஸ்ரீ
S. வைடாபுரி ஸ்ரீ

நாகப்பட்டணம்

ரு. மு. நாகரத்தின ஸ்ரீ

தேத்துறை

த. முருசப்ப ஸ்ரீ

தாமரைக்கேணி

த. கனகசூரிய ஸ்ரீ

கொளும்பு

கார்த்திகேசு ஸ்ரீ

புளியந்தீவு

வே. க. கந்தைய ஸ்ரீ

பட்டிகோலா

பண்டிட் சபாபதி ஸ்ரீ

எல்பிடியா

A, A. வைரமுத்துப்பிள்ளை

திருநள்ளாறு

U. ஆறுமுக ஸ்ரீ

சாவக்கச்சேரி

U. நதுலராஜ ஸ்ரீ

சிவகிரி

S. N. கிருஷ்ணசாமி ஸ்ரீ

திருச்சிறுப்பள்ளி

K. சுப்பிரமணிய ஸ்ரீ

திண்டுகல்

M. பெருமாள் ஸ்ரீ

காட்டூர்

வ. ஆதியப்ப ஸ்ரீ

திருக்கண்ணமங்கை

வீர. வேலாயுத முதலியார்

திருப்பத்தூர்

கா. அ. சண்முக ஸ்ரீ
ஆ. க. கு. முருகைய ஸ்ரீ
கா. ஆ. இராமசாமி ஸ்ரீ
வெ. மார்க்கசகாய ஸ்ரீ
வா. சா. முனிசாமி ஸ்ரீ
பா. வெ. சென்னமூர்த்தி ஸ்ரீ
பெரியதனம் ரு. முருகைய ஸ்ரீ
ஆ. கோவிந்தசாமி ஸ்ரீ

இன்னும் வரும்

# அமிர்தாஞ்சனம்.

சர்வ நோய்களுக்கும்

ஸித்த ஔஷதம்




| | | | | |
|---|---|---|---|---|
| அமிர்தாஞ்சனம் | டப்பி 1-க்கு | 0 | 10 | 0 |
| மோஹினி தைலம். | பாட்டில் 1-க்கு | 0 | 12 | 0 |
| படை மருந்து | டப்பி 1-க்கு | 0 | 6 | 0 |
| பல் பொடி | டப்பி 1-க்கு | 0 | 2 | 0 |

எல்லாக் கடைகளிலும் கிடைக்கும்

அமிர்தாஞ்சன் டிப்போ,

7, தம்புச்செட்டி தெருவு, சென்னை.


INTED AT THE 'NOBLE PRESS' TRIPLICANE, MADRAS.